RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 15 டிசம்பர் 2023 இதழ்:- 31

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை! பலர் வருவார்கள்! சந்திப்பார்கள்! போய் விடுவார்கள்!

## உலகத்தமிழ் பேரவையினரைப் பார்த்து ஆறு திருமுருகன் கேள்வி



தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. ஏனென்றால் சாதாரணமாக இந்துக்களின் பிரச்சினைக்கு கூட தீர்வு கிடைக்காத நிலையில், தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும் என நம்ப முடியாத நிலை காணப்படுவதாக தெல்லிப் பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தின் தலைவரும் நல்லை ஆதீனத் தின் செயலாளருமான கலாநிதி (4ம்பக்கம் பார்க்க)

# கொழும்பில் ரணிலுடன் உலகத்தமிழர் பேரவை தேன்நிலவு! வடக்கு கிழக்கில் கைதுகளும் ஆக்கிரமிப்புக்களும் தொடர்கிறது!



கடந்த வாரங்களில் கொழும்பில் தங்கியுள்ள உலகத் தமிழர் பேரவையுடன் பௌத்த மத குருமார்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தேன் நிலவு அரசியல் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் வேளையில் வடக்கு கிழக்கில் வழமைக்கு மாறாக வேகமாக கைதுகளும் ஆக்கிரமிப்புக்களும் தொடர் கின்றன. அவற்றில் சில வருமாறு தொல்லியல் திணைக்களத்தின் (3ம் பக்கம் பார்க்க)

**ஈழநாடு மின்னிதழில் பார்க்க**
**eelanadu.ca**

# தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை! சரத்வீரசேகரவின் கேள்விக்கு தொடை நடுங்கிய சுரேன்



## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

# www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

Team SIVA

WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva

B.Comm. Sales Representative

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7

NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Simcoe St N & Conlin Rd



**Oshawa** $279,000

Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University


### Eglinton / Mccowan



**Scarborough** $499,900

Bedrooms: 2 Washrooms: 2
Convenience living on Eglinton line


### Warden Ave / Enterprise Blvd



**Markham** $749,000

Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407


### Dundas/Hurontario St



**Mississauga** $599,000

Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Warden/Steeles



**Scarborough** $760,000

Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1900 Sqft Of Living Space

### Main St. E & Russell St.



**Southgate** $799,999

Bedrooms: 4 Washrooms: 3
Detached Home W/3063 Sq Ft


### Kennedy Rd & Bovaild Dr. E



**Brampton** $1,100,000

Bedrooms: 3 Washrooms: 3
recently renovated, sep. entrances

### Eglinton Ave & Danforth Rd



**Toronto** $1,150,000

Bedrooms: 4 Washrooms: 4
Low Maintenance Fees.

### Fletcherscreek Blvd/Bovaird Dr



**Brampton** $3,500

Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!

### Markham Rd & Lawrence Ave

FOR LEASE




**Scarborough** $2,000

Basement for lease
Close To TTC, Shopping & 401.

### Meadowvale / Sheppard

FOR LEASE



**Scarborough** $1,5[illegible]000

Bedrooms: 1 Washrooms: 1
Great neighbourhood

### 9th Line/14th Ave



**Markham** $1,689,000

Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

## Looking for more house?

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை! சரத்வீரசேகரவின் கேள்விக்கு தொடை நடுங்கிய சுரேன்



தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை என உலகதமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார் என ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளி யிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளிற்கு ஆதரவளிக் கின்றீர்களா என நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர கேள்வி எழுப்பிவேளை சுரேன் சுரேந்திரன் இதனை தெரி வித்துள்ளார்.

12 டிசம்பர் 2023 செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற சந்திப்பின் போது சுரேன் சுரேந்தின் இதனை தெரிவித்துள்ளார் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர நாட்டின் ஒற்றையாட்சிக்கு ஆபத்து ஏற் பட்டபோதெல்லாம் அதற்கு எதிராக பௌத்த மதகுரு மார்கள் அணி திரண்டுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை 2500 வருடங்களாக பௌத்த மதகுருமார் காப்பாற்றியுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்த காலத்தில் 17 படையெடுப்புகள் இடம் பெற்றன விடுதலை ப்புலிகள் பிரிவினைவாத போரில் ஈடுபட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களை அடைவதற்காக அப்பாவி பொதுமக்களை கொலை செய்வதே பயங்கரவாதம் ஆகவே பயங்கரவாதத்திற்கான காரணம் நியாயப்படுத்தப் பட்டாலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது நாங்கள் முழுமையாக பயங்கரவாதத்தை தோற்கடித்துள்ள போதிலும் விடுதலைப்புலிகளை நினை வுகூருவதற்கு மேற்குலக நாடுகள் அனுமதிக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். நீங்கள் விடுதலைப்புலிகளை ஆதரிக் கின்றீர்களா என்ற சரத்வீரசேகரவின் கேள்விக்கு உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் நாங்கள் தனிநாட்டு கொள் கையை ஆதரிக்கவில்லை நாங்கள் அதற்கு ஆதரவளித் திருந்தால் நான் இங்கு வந்திருக்கமாட்டேன் என தெரி வித்தார் என ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# கொழும்பில் ரணிலுடன் உலகத்தமிழர் பேரவை தேன்நிலவு! வடக்கு கிழக்கில் கைதுகளும் ஆக்கிரமிப்புக்களும் தொடர்கிறது!



கடந்த வாரங்களில் கொழும்பில் தங்கி யுள்ள உலகத்தமிழர் பேரவையுடன் பௌத்த மத குருமார்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தேன் நிலவு அரசியல் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் வேளையில் வட க்கு கிழக்கில் வழமைக்கு மாறாக வேகமாக கைதுகளும் ஆக்கிரமிப்பு க்களும் தொடர்கின்றன. அவற்றில் சில வருமாறு தொல்லியல் திணை க்களத்தின் அச்சுறுத்துள்ளாகி இரு க்கும் வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை பூசகர், தலைவர் செயலாளர் ஆகி யோர் நெடுங்கேணி பொலிஸாரினரால் விசாரணைக்கு உட்படுத்தி இருக் கின்றார்கள் யாழ் பல்கலைக்கழகத் தின் முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றிய உப தலைவர் தர்ஷனிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தி இருக்கின்றனர்

உதயன் பத்திரிகையின் ஆசிரியர் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவால் 4 மணி நேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றார்

திருகோணமலை பெரியகுளத்தில் சட்ட விரோத விகாரைக்கு எதிராக போராடிய செயற்பாட்டாளர் ஒரு வரை பயங்கரவாத தடுப்பு விசார ணைப்பிரிவால் விசாரணைக்கு உட் படுத்தி இருக்கின்றார்கள்

நினைவேந்தல்களில் ஈடுபட்ட மாண வர் உட்பட 11 பேரை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைத்து இருக்கின் றார்கள்

திரு ரணில் விக்கிரமசிங்காவிற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம் தொடர் பான செய்திகளை சேகரிக்கச் சென்ற (22ம் பக்கம் பார்க்க)

# யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட படையினருக்கு எதிராக தடை! உறுதியான பதில் அளிக்காமல் நழுவிய பிரிட்டன் அமைச்சர்



இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்ட அதிகாரிகளிற்கு எதிராக தடைகளை அறிவிக்கவேண்டும் என பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் விடுத்த வேண்டுகோள்களிற்கு பிரிட்டனின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஆன் மேரி டிரெவெல்யன் உறுதியான பதிலை வழங்க தவறி யுள்ளார். இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து இடம் பெற்ற கடுமையான விவாதங்களின் போது பிரிட்டனின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஆன் மேரி டிரெவெல்யன் உறுதியான பதிலை வழங்க தவறியுள்ளார்.

கென்சவேர்ட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர்களிற்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற குழு வின் தலைவருமான எலியட் கோர்ல் பேர்ன் அமைச்சர நோக்கி நேரடியாக பின்வரும் கேள்வியை எழுப்பினார்.

இலங்கையின் உயர் சமூகத்தை சேர்ந்த யுத்த குற்றங்களில் ஈடுபட்ட னர் என நம்பகதன்மை மிக்க குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள வர்களிற்கு எதிராக தடைகளை விதி ப்பதற்காக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சு ஆதாரங்களை ஆராய்கின் றது (22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**



குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
**416 755 5544**

# நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை! பலர் வருவார்கள்! சந்திப்பார்கள்! போய் விடுவார்கள்!

## தீர்வு கிடைக்காது உலகத்தமிழ் பேரவையினரிடம் ஆறு திருமுருகன்

தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. ஏனென்றால் சாதாரணமாக இந்துக்களின் பிரச்சினைக்கு கூட தீர்வு கிடைக்காத நிலையில், தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும் என நம்ப முடியாத நிலை காணப்படுவதாக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் நல்லை ஆதீனத்தின் செயலாளருமான கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

கடந்த 09 டிசம்பர் 2023 உலக தமிழர் பேரவையினர் நல்லை ஆதீன முதல்வரை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். உலக தமிழர் பேரவையினரை சந்தித்த போது ஆறு திருமுருகன் மேலும் கூறியதாவது :

இன்று நீங்கள் எல்லோருமாக இங்கே வந்திருக்கிறீர்கள். நீங்கள் யார் என்று எங்களுக்கு தெரியவில்லை. உங்களைப் போல் பலர் இங்கே வருகை தந்து சந்திக்கிறார்கள். பின்பு போய் விடுவார்கள். ஆனால், எந்த முடிவோ எந்த தீர்வுமோ எட்டப்படுவதில்லை.



குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் கூட நீங்கள் இருக்கும் கதிரையில் இருந்து என்னிடம் பல பிரச்சினைகளை கேட்டறிந்தார். நாங்களும் பல விடயங்களை கூறினோம். அவ்வாறே போய்விட்டார். எந்த தீர்வும் கிடைக்கவில்லை.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் திருப்பணி வேலைகளை செய்ய முடியாதுள்ளது. அங்கே பல இடர்ப்பாடுகள் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படுகிறது.

அதே போல காங்கேசன்துறை பகுதியை எடுத்துக் கொண்டால், எங்களுடைய சித்தர்கள் இருந்த இடங்கள், சமாதிகளை இடித்து, புராதன கோவில்களை இடித்து, ஜனாதிபதி மாளிகையினை கட்டிவிட்டு இன்று அந்த இடத்தை வேறு யாருக்கோ விற்க முற்படுகிறார்கள். இதெல்லாம் பிழையான விடயம் தானே. ஏனென்றால், முதலில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது தான் எமக்கு ஒரு நம்பிக்கை வரும்.

தமிழ் மக்களுக்கு தீர்வினை பெற்றுத் தருவீர்கள் என்று இந்த விடயத்தை உடனடியாக கருத்தில் எடுத்து இதனை செயல்படுத்த நீங்கள் முன் வாருங்கள், பார்ப்போம்.

அதேபோல இந்த பிரச்சினை தொடர்பில் அஸ்திரிய பீடத்தினர் கூட இங்கே வருகை தந்து ஆதினத்தை சந்தித்த போது பல விடயங்களை எடுத்துரைத்தோம். ஆனால், அவை காற்றில் போய் விட்டன. அதே போல நீங்களும் போகக்கூடாது. நீங்களும் இந்த விடயங்களை கருத்தில் கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

# மல்வத்து மகாநாயக்க தேரர் 6 தடவைகள் தலைவர் பிரபாகரனை சந்திக்க முயன்றும் கைகூடவில்லை என்று சொன்னதாக சுரேன் சுரேந்திரன் கதை?



யுத்த காலத்தில் மல்வத்து மகாநாயக்க தேரர் ஆறு தடவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்க முயன்றதாகவும் ஆனால், அந்த விடயம் கைகூடவில்லை என தம்மிடம் தெரிவித்ததாகவும் உலக தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலை வழிபட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்

இலங்கைக்கு வருகை தந்து பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம். அதே போல மும்மத தலைவர்கள், மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம்

கிறிஸ்தவ தலைவர்களையும் சந்தித்திருந்தோம். அவர்களை சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் நடந்த போர்க்குற்றங்கள் போன்றவற்றுக்கு பொறுப்புக் கூறல் ஒரு முக்கியமான விடயம் வெளிநாடுகளின் பிரேரணைகளை நிறைவேற்ற வேண்டியதும் முக்கியமான விடயம் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பிரேரணை ஒன்றை நாங்கள் ஜனாதிபதி மற்றும் ஏனையோரிடம் கையளித்திருக்கிறோம்.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மதகுருமார்களுடன் ஒன்று சேர்ந்து 25 மாவட்டங்களுக்குச் சென்று இந்த பிரச்சினைளுக்கு ஒரு தீர்வினை ஒன்றிணைந்து மக்களாக கொண்டு வர வேண்டும் என்பது தான் எங்களது அடிப்படை நோக்கம்.

நாங்கள் அரசியல்வாதிகளை சந்திப்பதன் நோக்கம், இப்படியான வேலைத் திட்டத்தை நாங்கள் செய்கின்றோம் என்பதை அரசியல்வாதிகளுக்கு வெளிப்படையாக கூறுவதற்காகவே ஆகும். இதை குறை கூறக்கூடாது அல்லது குறை கூறும் அமைப்பாக எங்களை பார்க்கக் கூடாது.

குறிப்பாக அரசாங்கத்தின் வேலைத் திட்டம் அல்லது பௌத்தர்களின் வேலைத்திட்டம் என்று குறை கூறக் கூடாது என்பதற்காக நாங்கள் அரசியல்வாதிகளுக்கும் திட்டத்தினை தெளிவாக கூறி இதை மக்கள் மயப்படுத்துவதே எமது நோக்கம். மக்களே தீர்ப்பு கூற வேண்டும் என்பது எமது நோக்கம்.

அரசியல்வாதிகள் குறிப்பாக, பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளையும் அதாவது கோட்டா தவிர ஏனையோரை சந்திக்கவுள்ளோம்.

பல தரப்பட்ட சமூகத்தினரை சந்தித்து வேலைத் திட்டத்தினை மக்கள் மயப்படுத்தி, மக்கள் மத்தியில் வருகின்ற தீர்வுகள் தான் நிரந்தரமானதாக இருக்கும் என்றே நாங்கள் சிந்திக்கின்றோம்.

அஸ்கிரிய பீடத்தினை நாங்கள் சந்தித்த போது மகாநாயக்க தேரர், சகோதரத்துவம், சமதர்மம், சமாதானம் என்ற அடிப்படையில் வேலை செய்தால் இலங்கை என்ற நாட்டில் பிரச்சினைகள் இருக்காது. அப்படி அரசியல்வாதிகள் செய்வதில்லை. நீங்கள் இப்படி மக்களிடம் செல்லப் போவதை நான் வரவேற்கிறேன். இதற்கு நான் நிச்சயமாக உறுதுணையாக இருப்பேன். அதனை நான் வெளிப்படையாகவே கூறி, ஆதரவு தருகிறேன் என்று கூறினார்.

அதேபோல மல்வத்து மகாநாயக்க தேரர், தான் போர்க்காலத்தில் கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்காக ஆறு தடவை அப்போதைய அரசாங்கங்களை கேட்டதாகவும், அதற்கு அரசாங்கம் விடாதிருந்த போது, ஆறாவது தடவையாக பிரபாகரனை காண வேண்டும் என்று வவுனியா வரை தான் வந்ததாகவும், ஆனால் அது கைகூடவில்லை எனவும், போர்க்காலத்தில் கூட ஒரு தீர்வைக் கொண்டு வர வேண்டும், சமாதானத்தை கொண்டு வர வேண்டும் என்ற விடயத்தில் தாங்கள் ஈடுபட்டதாகவும், இப்படி மக்கள் மயமாகி அரசியல்வாதிகளை தவிர்த்து மக்கள் மூலமாக ஒரு தீர்வு வருவதற்கான நோக்கம், ஒரு நல்ல நோக்கம் தான். அதை தான் ஆதரிப்பதாகவும் வாழ்த்து தெரிவிப்பதாகவும் கூறி எங்களை வழியனுப்பினார் என்று குறிப்பிட்டார்.

## தமிழையும் சிங்களத்தையும் ஒரே நேரத்தில் கற்க முயன்று தோல்வி

தமிழையும் சிங்களத்தையும் ஒரே நேரத்தில் கற்க முயன்று தோல்வியடைந்துள்ளேன் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் தெரிவித்துள்ளார் சிங்கள பத்திரிகையொன்றிற்கான பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்

நான் தமிழையும் சிங்களத்தையும் கற்க முயன்றேன் நான் இரண்டையும் ஒரேநேரத்தில் கற்க முயன்றேன் தவறு செய்தேன் இரண்டு மொழிகளை ஒரே நேரத்தில் கற்க முயல்வது சவாலான விடயம்

எனது கடினமான வேலைப்பளு காரணமாக இரண்டு மொழிகளையும் கற்கமுடியவில்லை. என்னால் அடிக்கடி பயன்படுத்தக்கூடிய சில சொற்களை கற்க முயல்கின்றேன் எனக்கு தெரிந்த ஒரு சில சொற்களை பேசினாலும் மக்கள் உடனடியாக என்னை நோக்கி வருவதை அவதானித்துள்ளேன்.

எனக்கு மொழிகளை கற்றுக் கொள்வதில் ஆர்வம் அதிகம் பல மொழிகளை கற்றுக் கொள்ள முயல்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.



# உலகத்தமிழர் பேரவையின் நகர்வுக்கு ஜனநாயக தமிழ்தேசியக் கூட்டணி எதிர்ப்பு!



தனி நபர்கள் தமக்குள் பொறுப்பற்ற பிரகடனங்களை உருவாக்கி அவற்றை தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக முன்மொழிய முற்படுவது கண்டனத்திற்குரியது. உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பை சேர்ந்த ஒரு சிலர் பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கொச்சைப் படுத்து முகமாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

10 டிசம்பர் 2023 அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு கலந்துரையாடாது அவர்களது அனுமதியை பெறாமல், தன்னிச்சையான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது வேதனைக்குரியது. புலம்பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தம்மை காட்டிக் கொண்டு எமது ஒட்டு மொத்த அரசியல் அபிலாசைகளையும் தவறாக வழி நடத்திச் செல்லும் இந்த நடவடிக்கையை நாங்கள் நிராகரிக்கிறோம். இந்த நடவடிக்கையானது அவர்களது சொந்த நலன்களை பூர்த்தி செய்வதற்கு தமிழ் மக்களின் அரசியலை பலிக்கடாவாக்கும் செயற்பாடா என்று சந்தேகம் கொள்ள வேண்டி உள்ளது.

ஈழத் தமிழர்களால் தமது அரசியல் அபிலாசைகளை அடைவதற்காக நமது தேசத்தில் அயராத முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் நடவடிக்கைகளுக்கு புலம்பெயர் அமைப்புகள் ஆதரவாக செயற்பட வேண்டுமே தவிர அவற்றை மலினப்படுத்துகின்ற நடவடிக்கைகளில் அவர்கள் நேரடியாக ஈடுபடுவது வருத்தம் அளிக்கிறது.

அவர்கள் முன் வைத்திருக்கும் பிரகடனத்திலே மாகாணங்களுக்கான அதிகாரங்களை பகிர்வதற்கே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறி இருப்பது வேடிக்கையானது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல் இலக்கையே புரிந்து கொள்ளாதவர்கள் என்பதை தெளிவாக எடுத்து காட்டுகிறது.

தமிழ் மக்களின் இறுதி அரசியல் தீர்வு என்பது சமஷ்டி முறையான ஆட்சியமைப்பாகவே இருக்க முடியும் என்பதில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மாறாத கொள்கையோடு தொடர்ந்தும் பயணித்து வருகிறது. அந்த அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அரசாங்கத்தால் அழைப்பு விடுக்கப்பட்ட போது நல்லிணக்க நடவடிக்கையாக ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கும் அதிகாரங்களை பகிர்ந்து தேர்தல்களை நடத்துமாறு நாங்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளாம்.

அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைளும் நடந்தன. இந்த நேரத்திலே புதிய அரசியல் யாப்பு, மாகாண சபைக்கான அதிகாரங்களை பகிர்வதற்காக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று முன்வைக்கின்ற கோரிக்கை அபத்தமானதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை குழி தோண்டி புதைக்கும் ஆபத்தான நடவடிக்கையும் ஆகும்.

ஒரு சிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்காக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மலினப்படுத்தும் நடவடிக்கைகளில் புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் ஈடுபட வேண்டாம் என்று நாங்கள் கோரிக்கை வைப்பதோடு, நமது கண்டனத்தையும் பதிவு செய்து கொள்கிறோம் – குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு திரு பாலா உதயன் ஊடாக1200.00 டொர்கள் வழங்கிய அன்பர்கள்

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 28 ஒக்டோபர் 2023 முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக நடாத்திய ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு திரு பாலா உதயன் அவர்கள் ஊடாக திரு முத்தையா ஈசன் 100.00 திரு கபிலன் (லீலா சுப்பர் மார்க்கட்) 200.00 திரு பரமேஸ்வரன் கிருசாந் 200.00 காலஞ்சென்ற சதாசிவம் தங்கம்மா அவர்களது நினைவாக இந்திரன் 100.00 திரு தர்மரெட்ணம் தர்மசேனன் குடும்பம் 100.00 திரு தர்ம ரெட்ணம் சந்திரசேனன் குடும்பம் 100.00 திரு கணபதிப்பிள்ளை ரஜீவன் 100.00 கணபதிப்பிள்ளை சுஜீவன் 100.00 திரு பபீசன் யாது 100.00 திரு கந்தையா விக்கினேஸ்வரன் 100.00 மொத்தம் 1200.00 வழங்கி இருந்தார்கள். இவர்களைப் போன்ற கருணையாளர்களது கருணையில் தான் கடந்த 13 ஆண்டுகள் எம்மால் பயணிக்க முடிகின்றது. இவர்களுக்கு ஈழநாடு பத்திரிகை சார்பிலும் புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகள் சார்பிலும் மனமார்ந்த நன்றிகள்.

# 108 ஆண்டுகளுக்கு முன் நடந்த கொலை:- விசாரணைக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி ரணில்!

108 வருடங்களுக்கு முன்னர் எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸ் (Sir Edward Henry Pedris) படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்த மூவர் கொண்ட குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி முன் வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி அந்தக் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு அனில் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹென்றி பெட்ரிஸ் இலங்கையின் காலனித்துவ அதிகாரிகளால் அரசாங்கத்திற்கு எதிரான கலவரம் மற்றும் தேசத் துரோகத்திற்காக குற்றம் சுமத்தப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஜீலை 7, 1915 அன்று அப்போது 27 வயதாக இருந்த எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸ் இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு எந்த முறையீட்டையும் பொருட்படுத்தாமல் தூக்கிலிடப்பட்டார்.

இதன்பின் ஹென்றி பெட்ரிஸின் உடல், இராணுவச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளியை தகனம் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி அடையாளம் தெரியாத இடத்தில் தகனம் செய்யப்பட்டது.

அப்போது நாட்டைக் கட்டுப்படுத்திய மூத்த அதிகாரிகள் மேற்கொண்ட திட்டத்தின் விளைவாக இந்தக் கொலை நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கொலை சம்பவம் தொடர்பான உண்மையான தகவல்களைக் கண்டறியும் வகையில் அமைச்சரவையில் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்பிப்பதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.



# உலகத்தமிழர் பேரவை என்ன செய்ய முயற்சிக்கின்றது?

தமிழ் புலம்பெயர் குழுவொன்று பௌத்த பிக்குகள் குழுவுடன் இணைந்து சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. முதல் தடவையாக பௌத்த மதபீடங்களை சந்தித்திருக்கின்றது. பௌத்த மதபீடங்களை சந்திப்பதும், தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதும் தவறான விடயங்கள் அல்ல ஆனால், ,வற்றின் மூலம் எதை சாதிக்க முற்படுகின்றனர் என்பதே முக்கியமானது.

உலகத் தமிழர் பேரவை புலம்பெயர் சூழலில் செல்வாக்கு மிக்க அமைப்பு அல்ல. ஒப்பீட்டடிப்படையில் ஏனைய அமைப்புகளோடு ஒப்பிட் டால், மிகவும் குறைவான உறுப்பினர்களையும், குறைவான மக்கள் தொடர்புகளையுமே கொண்டிருக்கின்றது எனினும் தனிப்பட்ட சில தொடர்புகளின் வழியாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தோடு தொடர்புகளை பேணி வருகின்றது.

அரசியல் ரீதியில் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள், இலங்கை தமிழரசுக் கட்சியுடன் குறிப்பாக அதன் பேச்சாளரும் வெளிவிவகாரங்களை கையாளுபவருமான எம்.ஏ.சுமந்திரனோடு நெருக்கமானவர்களாக தங்களை வெளிக்காட்டியவர்கள். தமிழரசு கட்சிக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை ஏனைய கட்சிகளுக்கு குறிப்பாக ரெலோ, டி.பி.எல்.எப் (புளொட்), ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியவற்றுக்கு வழங்கியதாக சான்றில்லை.

மேற்படி கட்சிகள், ஒப்பீட்டடிப்படையில், மேற்குலகத்தை விடவும், இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருக்கும் கட்சிகள் என்பது இரகசியமானதல்ல.

உலகத் தமிழ் பேரவையின் கடந்த கால செயல்பாடுகளை, இந்த அடிப்படையில் தான் புரிந்து கொள்ள முடியும். ஆனால், தற்போது, முற்றிலும் மாறுபட்ட முகத்துடன் அவர்களது இலங்கை விஜயம் இடம்பெற்றுள்ளது. அரசியல்வாதிகளை விடுத்து, மக்களுக்கும் மக்களுக்குமான ஊடாட்டத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தாங்கள் ஈடுபடவுள்ளதாக கூறுகின்றனர். அந்த அடிப்படையில் பௌத்த பிக்குகளுடன் இணைந்து ஒரு பிரகடன த்தையும் வெளியிட்டிருக்கின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் யுத்தத்திற்கு பின்னரான காலத்திலும், சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் சகவாழ்வு மற்றும் சமாதானம் என்னும் சொற்களுடன் பலவாறான அரசு சாரா நிறுவன செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவ்வாறான செயல்பாடுகள் எவையும் வெற்றியளிக்கவில்லை. சுருக்கமாக கூறுவதனால், அரசியலுக்கு முன்னால் அவற்றால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

சிங்கள மேலாதிக்க அரசியல் அனைத்தையும் விழுங்கி விட்டது. சிங்கள மேலாதிக்க அரசியல் என் பது அடிப்படையில் சிங்கள பௌத்த மேலாதிக்க மனோநிலையுடன் பின்னிப்பிணைந்திருக்கின்றது. பௌத்த மேலாதிக்கமே, இன்று வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும், பிரதான விடயமாகும். தமிழ் மக்களின் வாழ்விடங்களில் விகாரைகளை நிறுவ முயற்சிப்பதும் அதனால் ஏற்படும் இன முறுகல் நிலையும் தொடர்கின்றது.

இவ்வாறானதொரு சூழலில் தான், உலகத் தமிழர் பேரவை, பௌத்த பிக்குகளுடன், வடக்கு, கிழக் கிற்கு வந்து கலந்துரையாடல்களை முன்னெடுக்கின்றது. அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் சமாதானத்தின் மீது, பெரும் ஈடுபாட்டைக் காண்பித்ததாக, உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதி கூறுகின்றார். அவ்வாறாயின் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கில் எந்தவொரு விகாரைகளும் நிறுவப் படாது என்னும் முடிவுக்கு நாம் வர முடியுமா? அதற்கான உறுதிமொழியை உலகத் தமிழர் பேரவை பெற்றிருக்கின்றதா? சமாதானத்தின் எல்லை என்பது சிங்கள மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு பணிந்து செல்வதா? அவ்வாறானதொரு சமாதானம் அல்ல தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது?

அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்ட த்தை அமுல்படுத்தப் போவதாக ரணில் விக்கிரம சிங்க கூறினார். அதனை முதலில் எதிர்த்தவர்கள் பௌத்த பிக்குகள் தான். அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதியை தீயிட்டு கொழுத்தி, தங்களின் தமிழர் விரோதத்தை வெளிப் படுத்தியவர்கள் பௌத்த பிக்குகள் தான். அதன் பின்னர் தான்சரத்வீரசேகர, உதயகம்பன்பில போன்ற இனவாதிகள் வெளியில் வந்தார்கள். நிலைமை இவ்வாறிருக்கின்ற போது, நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம் என்று பௌத்த மத பீடாதிபதிகள் கூறுவதும் அதனை கேள்விகளின்றி உலகத்தமிழர் பேரவையினர் தமிழ் மக்களுக்கு முன்னால் ஒப்புவிப்பதும் சரியான அணுகு முறை தானா? இது தொடர்பில், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்திக்க வேண்டும். மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு கூட இந்திய பிரதமரிடம் செல்ல வேண்டிய நிலையிலேயே தமிழ்கட்சிகள் இருக்கின்றன.

# இது என்ன இமயமலைப் பிரகடனம்? பிரகடனத்தில் உள்ள விடயங்கள் என்ன?

ஒவ்வொரு தனிநபரும் சமாதானமாகவும், கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், எவ்வித பயமும், சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக் கூடிய ஒரு இலங்கை நாடு உருவாக்கப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளை மையப்படுத்திய ‘இமயமலைப்’ பிரகடனம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் உலகத்தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன் சுரேந்திரனால் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பௌத்த தேரர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்கிய சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய ஒருங்கிணைந்த தரப்பினருடனான சந்திப்பின் பின்னரேயே குறித்த பிரகடனம் கையளிக்கப்பட்டது. குறித்த பிரகடனத்தில், முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

தங்களுடைய அடையாளம் மற்றும் பெருமையை இழந்து விடுவோமா என்ற பயம் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏற்படாத வகையில் நாட்டின் பல்வகைமைத் தன்மையைப் பேணிப் பாதுகாத்தலும், ஊக்குவித்தலும்

- பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்ளல், உள்நாட்டு உற்பத்தியையும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் ஏனையோரின் முதலீடுகளையும், பங்களிப்பையும் ஊக்குவிக்கக் கூடிய இலங்கை ஒரு நடுத்தர வருமானம் பெறும் நாடாக வெற்றிப் பாதையில் செல்வதனை உறுதிப்படுத்தக்கூடிய பொருத்தமான அபிவிருத்தி மாதிரிகளைத் தெரிவு செய்தல்



- மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிகாரப் பகிர்வினை உறுதிப்படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக் கூடிய, சமத்துவம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சமமான குடியுரிமையை முன்னிலைப்படுத்தியதும் அதற்கான பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களை உள்ளடக்கியதுமான ஒரு இரசியலமைப்பை உருவாக்குதல், அது வரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் உள்ளவாறான அதிகாரப்பகிர்வினைக் கண்ணியத்துடன் நடைமுறைப்படுத்தல்.
- ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டினுள் அதிகாரத்தைப் பகிர்தலும், மத, கலாச்சார மற்றும் ஏனைய அடையாளங்களை ஏற்று அத்தகைய அடையாளங்களுக்கு மதிப்பளிப்பதோடு இனங்களுக்கிடைலான மற்றும் மதங்களுக்கிடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உழைப்பதும்.
- கடந்த கசப்பான காலங்களில் இருந்து கற்றுக் கொள்ள உறுதி கொண்டு, மீண்டும் இவ்வாறான துயரங்கள் ஒருபோதும் ஏற்படாதிருக்கப் பொறுப்புக்கூறல் உள்ளடங்கலாக, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒப்புரவு அடைந்த ஓர் இலங்கைக்கான தூர நோக்கு.
- இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளுக்கும் இதர சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் மதிப்பளித்து, சுயாதீனமான மற்றும் ஆற்றல் வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதனூடாக இலங்கையானது ஜனநாயகத்துடன் கூடிய சமாதானமான, வளமான உலக நாடுகள் மத்தியில் தனது பெருமையை நிலைநாட்டுதல். என்பன காணப்படுகின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நேபாளத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரகடனத்தில் அம்பகஹபிடிய தரப்பு அனுநாயகர் மாதம்பாகம அசாஜி திஸ்ஸ தேரர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பிரதம சங்கநாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர், ஸ்ரீதர்மரக்ஷித தரப்பு பொது செயலாளர் கிதலகம ஹேமசார நாயக தேரர் வஜிரவண்ச தரப்பு செயல் மகாநாயகர் பேராசிரியர்.பல்லேகந்த ரத்னசார தேரர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்ரீ சத்தர்மவண்ச தரப்பு, உறுப்பினரும் மனித வள மேம்பாட்டு மையத்தின் தலைவருமான கலுபஹன பியரதன நாயக தேரர், மத்திய மாகாணத்தின் பிரதம சங்கநாயக தேரரான நாரம்பனாவே தம்மாலோக தேரர், ஸ்ரீ சதமவண்ச தரப்பு அனுநாயக்கர் வலதர சோபித தேரர் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளர்.

அதேநேரம், உலகத்தமிழர் பேரவையின் சார்பில் வேலுப்பிள்ளை குகனேந்திரன் கலாநிதி. சாந்தினி ஜெயராஜா, தனபாலசிங்கம் சுரேந்திரன், சிறிகாந்தா பவகுகன் கலாநிதி.கண்ணப்பர் முகுந்தன், பிரகாஷ் ராஜசுந்தரம், ராஜ் தவரட்ணசிங்கம் ஆகியோரும் கையொப்பமிட்டுள்ளனர்.

இதேவேளை புலம்பெயர் அமைப்பான உலகத்தமிழர் பேரவையும், பௌத்த தேரர்களும் ஒருங்கிணைந்துள்ள இந்தக் குழுவானது, சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியம் எனும் பெயரில் பல தசாப்தங்களாக இலங்கையின் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக செயலாற்றி வருகின்ற மற்றும் அனைத்து இலங்கையர்களும் ஒற்றுமையாக, எவ்வித பயமும், சந்தேகப்படுதலுமின்றி, சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய அமைதிமிக்க வளமான இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றசங்க உறுப்பினர்களது கூட்டணியாக செயற்பட்டு வருகின்றனர்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# எங்களுடன் இணையுங்கள் வட பகுதி மக்களுக்கு ஜே.வி.பி. பகிரங்க அழைப்பு!



எங்களுடன் இணையுங்கள் நாங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வோம் என வடபகுதி மக்களிற்கு வேண்டுகோள் விடுத்துள்ள ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க ஊழல் மிகுந்த ஆளும் குழுவை தோற்கடிப்பதற்கான தேசிய விடுதலை இயக்கத்திலும் நீங்கள் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இந்து நாளிதழிற்கான பேட்டியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். எங்களின் நெருங்கிய அயல் நாடான இந்தியா மிகவும் வலுவான அரசியல் பொருளாதார மையமாக மாறியுள்ளமை எங்களிற்கு தெரியும். ஆகவே பொருளாதார அரசியல் முடிவுகளை எடுக்கும்போது அது இந்தியாவை எப்படி பாதிக்கும் என்பது குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம்

இரண்டு சக்தி வாய்ந்த நாடுகள் மத்தியிலேயே பூகோள அரசியலில் போட்டி காணப்படுகின்றது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இல்லை

இந்த நாட்டில் சில பிரச்சினைகள் உள்ளன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் குறிப்பாக தமிழர்கள் முஸ்லீம்கள் தொடர்பில் அவர்களது மொழி கலாச்சார விடயங்கள் மற்றும் ஆட்சி முறையில் பங்கெடுத்தல் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. இந்த விவகாரங்களிற்கு நாங்கள் தீர்வை காணவேண்டும்.

வடக்கு மக்களிற்கு தேசிய மக்கள் சக்தி விடுக்கின்ற வேண்டுகோள் இதுதான் எங்களுடன் இணையுங்கள் நாங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வோம். ஊழல் மிகுந்த ஆளும் குழுவை தோற்கடிப்பதற்கான தேசிய விடுதலை இயக்கத்திலும் நீங்கள் இணைந்து கொள்ள வேண்டும்.

# ரணில் அரசு மீது பலஸ்தீன தூதுவர் கடும் விசனம் கூட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். ஸைட் கடுமையான விமர்சனங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் 08 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை பலஸ்தீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் பாராளுமன்ற பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டமொன்று அச்சங்கத்தின் தலைவர் இராஜாங்க அமைச்சர் கலாநிதி. சுரேன் ராகவன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். ஸைட்டும் பங்கேற்றுள்ளார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கடுமையான விமர்சனங்களை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் பாராளுமன்றத்தில் பலஸ்தீன, இஸ்ரேல் மோதல் சம்பந்தமாக வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன. தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன, இதனை விடவும், பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாக உள்ளது.

அத்துடன், பலஸ்தீன மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கம் பல்வேறு தருணங்களில் குரல் எழுப்பியுள்ளது. அவ்வாறான நிலையில் தற்போது மிகவும் நெருக்கடியான சூழலொன்று காணப்படுகின்றது. ஆனால் இலங்கை அரசாங்கம் தற்போது பாராளுமன்றத்தில் தீர்மானத்தினை நிறைவேற்றினாலும் அதற்கு அப்பால் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

விசேடமாக, உள்நாட்டில் பலஸ்தீனுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களும் திட்டமிட்ட வகையில் மழுங்கடிக்கப்படுவதோடு அப்போராட்டங்களை முன்னெடுப்பதற்கான சுதந்திரங்கள் வழங்கப்படாத சூழலும் அவற்றை ஆரம்பத்திலேயே தடுத்து விடுகின்ற நிலைமைகளும் அதிகமாக உள்ளன.



ஆகவே பலஸ்தீன மக்கள் மீதான உண்மையான கரிசனைகளை வெளிப்படுத்தும் அதேவேளை இலங்கை அரசாங்கம் அதற்கு பிரதிபலிக்க வேண்டும். அதுவரையில் எவ்விதமான எதிர்பார்ப்புக்களையும் நாம் கொள்ளவில்லை என்று கூறிவிட்டு அந்தக் கூட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

இதேவேளை, பலஸ்தீன தூதுவரின் வெளியேற்றத்தினை அடுத்து, குறித்த நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் நஸீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டதை அடுத்து வெற்றிடமாக காணப்பட்ட நிலையில் புதிய நியமனம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# அரசியல் சீர்குலைவை சரி செய்வதே முதன்மை

உலகத் தமிழர் பேரவையை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களின் முயற்சியை பல்வேறு புலம் பெயர் அமைப்புகளும் விமர்சித்திருக்கின்றன. அவர்கள் புலம் பெயர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பௌத்த பிக்குகளுடன் இணைந்து பிரகடனமொன்றை வெளியிட்டிருப்பதை பெரும்பான்மையான புலம்பெயர் சமூகம் வரவேற்றதாகத் தெரியவில்லை.

தென்னிலங்கையை பொறுத்தவரையில் புலம் பெயர் சமூகத்தோடு அரசாங்கம் உரையாடி வருவதான ஒரு தோற்றம் ஏற்பட் டிருக்கின்றது. உலகத் தமிழர் பேரவையினர் இலங்கையில் தங்கியிருக்கும் சூழலில் சமத்துவம் மற்றும் நீதிக்கான அமெரிக்க அரசின் விசேட பிரதிநிதியான டீசிரி கோமியர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்ற செய்தியும் வெளியாகியிருகின்றது.

இதேவேளை, தமிழத் தேசிய அரசியல் பரப்பின் பிரதான கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான ரெலோ தனி நபர்கள் தமிழ் மக்களின் அரசியல் விவகாரங்களை கையாள முற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்திருக்கின்றது.

இதிலுள்ள அடிப்படையான பிரச்னை வேறு. அதாவது, தமிழ் மக்களின் அரசியலை எவர் வேண்டுமனாலும் கையாளலாம் என்னும் நிலைமை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைமைகள் இருக்கின்ற போதும் அவர்கள் மத்தியில் ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்கள் இல்லை தென்னிலங்கையோடு விடயங்களை கூட்டாகக் கலந்துரையாடும் போக்கு இல்லை.

இந்த இடை வெளியாலேயே உலகத் தமிழர் பேரவை என்னும் பெயரில் புலம்பெயர் சமூக உறுப்பினர்கள் சாதாரணமாக விடயங்களில் தலையீடு செய்ய முடிகின்றது. இது தொடர்பில் 'ஈழநாடு' தொடர்ந்தும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது.

அதாவது, தாயக அரசியலை வேறு தரப்புகள் கையாள அனுமதிக்கக்கூடாது. புலம்பெயர் சமூகத்தின் உதவியை பெற வேண்டும் அவர்களது ஆதரவு முக்கியமானது. ஆனால் தாயக அரசியலை தீர்மானிக்கும் உரிமையை அவர்கள் தன்னிச்சையாக எடுத்துக் கொள்ள அனுமதிக்கக்கூடாது. 2009வரையில் புலம்பெயர் அமைப்புகளும் தனிநபர்களும் வெறுமனே நிதியளிக்கும் கருவிகளாகவே இருந்தனர்.

ஆனால் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியின் பின்னர் தான் ஆளுக்கொரு கடை என்னும் அடிப்படையில் பல்வேறு அமைப்புகளும் தனிநபர்களும் அரசியலில் தலையீடு செய்ய முற்பட்டனர். 2009இற்கு பின்னரான தாயக அரசியல் தலைமைகளை மதித்து நடக்கும் போக்கு புலம்பெயர் அமைப்புகள் மத்தியில் பெரியளவில் இல்லை.

தாங்கள் கூறுவதை இங்குள்ளவர்கள் கேட்க வேண்டும் என்னும் அடிப்படையிலேயே அவர்களது அணுகுமுறை இருந்தது. இந்தப் போக்கின் விளைவாக விடுதலைப் புலிகளுக்கு அதிகம் உரிமை கோருவது யார் என்னும் அரசியல் போக்கொன்றும் உருவாகியது.

அந்த உரிமையை அதிகம் தங்கள் வசப்படுத்துவதை ஓர் அரசியல் போக்காகவே கைக்கொண்டிருப்பவர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர்தான். அதேவேளை கிளிநொச்சியில் அந்த உரிமையை தன் வசப்படுத்துவதில் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முன்னணி வகிக்கின்றார்.

இவ்வாறு ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிலர் இந்த விடயத்தை தங்கள் வசப்படுத்த வேண்டும் என்பதில் முனைப்போடு செயல் படுகின்றனர். இதற்கு பின்னால் புலம்பெயர் குழுக்களின் நிதி ஆதரவும் உண்டு. இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டியதை செய்யலாம் என்னும் சூழலில் தான உலகத் தமிழர் பேரவையினர் சிங்கள மக்களோடு உரையாடும் புதிய அத்தியாயமொன்றை ஆரம்பிக்கப் போவதாகக் கூறுகின்றனர். ஜனநாயக அரங்கில் எவரும் தங்களின் கருத்துகளை முன்வைக்கலாம் அதற்காக அவர்கள் செயல்படலாம்.

ஆனால் அவ்வாறானவர்கள் தமிழ் மக்களின் பெயரால் விடயங்களை முன்னெடுப்பது தான் சிக்கலானது. அது ஆபத்தானதும் கூட.

ஏற்கனவே, பல புலம்பெயர் அமைப்புகள் ஒன்றுபட்டு (22ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சனை தீர்வுக்கு நாங்கள் தடையில்லை!

## மல்வத்து, அஸ்கிரிய பீடாதிபதிகள் உலகத்தமிழர் பேரவையிடம் தெரிவிப்பு



நாட்டில் இனப்பிரச்சினை உட்பட அனைத்துவிதமான பிரச்சினைகளும் நீடித்துக்கொண்டிருப்பதற்கு பௌத்த தேரர்களே காரணமாக உள்ளனர் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நிலையில் நிரந்தரமான சமாதனம் ஏற்படுவதற்கு நாம் எப்போது தடைகளை ஏற்படுத்தவில்லை.

அனைத்து மக்களும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்க்கப்பட வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரர் மற்றும் மல்வத்துபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் உலகத் தமிழர் பேரவையிடத்தில் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

பௌத்த தேரர்கள் ஒருங்கிணைந்த சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டதோடு அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடல்களில் கலந்துக் கொண்டனர். இந்தச் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

முதலில் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கத் தேரர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரை குறித்த குழுவினர் சந்தித்தனர். இதன்போது இமயமலைப் பிரகடனம் அவரிடத்தில் கையளிக்கப்பட்டதோடு, அதனடிப்படையில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் சம்பந்தமாக தெளிவு படுத்தப்பட்டது.

அச்சமயத்தில் நிறைவேற்றப்பட்ட இமய மலைப் பிரகடனத்தை தான் ஏற்கனவே அறிந்திருப்பதாக தெரிவித்த மகாநாயக்க தேரர், குறித்த பிரகடனம் மக்களிடையே பிரசாரம் செய்யப்பட்டு உரிய கலந்துரையாடல்கள் பரந்துபட்ட அளவில் செய்யப்பட்டு மக்களுக்கு இடையிலான பிரச்சினைகள் மக்களின் பங்கேற்புடனேயே தீர்க்கப்பட வேண்டும். அதன் மூலமாகவே நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும் அத்தோடு, நான் சகோதரத்துவம், சமாதானம், சமத்துவம் என்ற நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதையே தொடர்ச்சியாக விரும்புகின்றேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து மல்வத்து பீடத்துக்குச் சென்ற குறித்த குழுவினர், மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரைச் சந்தித்து உரையாடினார்கள். இதன் போது நாட்டில் காணப்படுகின்ற பல பிரச்சினைகளை கலந்துரையாடல் மூலமாக தீர்க முடியும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

போர் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்கு அரசாங்கத்திடம் பல தடவைகள் கேட்டிருந்தேன். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பல முயற்சிகளை எடுத்திருந்தேன். எனினும் அவை கைகூடியிருக்கவில்லை.

பின்னர் போர் முடிவுக்கு வந்ததையடுத்து திருகோணமலை யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு ,கிழக்கின் முக்கிய பகுதிகளுக்கு நேரடியாகவே விஜயங்களை மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிட்டேன். அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினேன்.

விசேடமாக பாடசாலைகள் மீள்கட்டுமானம், குடிநீருக்கான கிணறுகள் நிர்மாணம், உள்ளிட்டவற்றுக்கு உதவிகளை வழங்க முடிந்திருந்தது.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதைய சூழலில் மிகவும் பாதிப்படைந்திருப்பதனால் அவர்களுக்கு உரிய உதவிகளை தெற்கிலிருந்து தான் செய்ய வேண்டும். அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக பிரார்த்தனைகளை மேற்கொள்கின்றோம்.

இதேநேரம், தமிழ் மக்களிடையே பௌத்த மதகுருமார்கள் தான் இந்த நாட்டில் இனப்பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளும் நீடிப்பதற்கு காரணமாக இருக்கின்றார்கள். அவர்கள் தான் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முட்டுக் கட்டையாக இருப்பவர்கள் என்ற நிலைப்பாடு விதைக்கப்பட்டுள்ளது.

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தடையானவர்களாக இருக்கப் போவதில்லை. நானும் இலங்கையர் என்ற வகையில் தமிழர், முஸ்லிம், சிங்களவர்கள் என் பாரபட்சம் பாராமல் பிரச்சினைகளுக்கு நிரந்தமான முற்றுப்புள்ளி வைப்பதற்கு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் ஊடாக நிரந்தரமான சமாதமும் சாந்தியும் நாட்டில் தோற்றம் பெற வேண்டும். அதற்காக குறித்த குழுவினரை ஆசீர்வதிக்கின்றேன். மேலும் தலதா மாளிகைக்கு சென்று அங்கே வரலாற்று பெருமை மிக்க வணக்க தலத்தினை பார்வையிடுமாறு கோருகின்றேன் என்றார். இதனையடுத்து குறித்த குழுவினர் தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக்கட்சியில் தனது ஆதரவாளர்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக்கணிக்கப்படுவதாக சம்பந்தர் புலம்பல்



திருகோணமலை மாவட்டத்தின் மூலக் கிளைகள் தெரிவின் போது எனக்கு ஆதரவாக உள்ள கட்சியின் நீண்டகால அங்கத்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி ஒழுக்காற்று குழுவிடத்தில் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில் அக்கட்சியின் மூலக்கிளைகள் மற்றும் தொகுதி, மாவட்டக்கிளைகள் புனரமைப்பு அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் மூலக்கிளை உள்ளிட்டவற்றின் புனரமைப்பின் போது, இலங்கை தமிழரசுக்கட்சியில் நீண்டகாலமாக செயற்படும் அங்கத்தவர்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இதனையடுத்து, அவர்கள் தாம் தொடர்ச்சியாக ஆதரவளித்து வருகின்ற இரா. சம்பந்தனுக்கு குறித்த விடயம் சம்பந்தமாக உரிய தெளிவு படுத்தல்களுடன் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்த விடயம் சம்பந்தமாக கரிசனை செலுத்திய இரா.சம்பந்தன், குறித்த மூலக்கிளை உள்ளிட்ட புனரமைப்பின் போது அங்கத்தவர்கள் தெரிவில் தாம் திருப்தி அடையவில்லை என்றும் அந்த தெரிவுகள் இதயசுத்தியுடன் நடைபெற்றாது தன்னை ஆதரிக்கும் கட்சியின் உறுப்பினர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசனத்தை வெளியிட்டுள்ளார். அது மட்டுமன்றி குறித்த விடயம் சம்பந்தமாக கட்சியின் ஒழுக்காற்றுக்குழு விசாரணைகளை நடத்தி உரிய தெளிவுபடுத்தல்களை செய்ய வேண்டும் என்றும், தவறுகள் இடம்பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீள் தெரிவு முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவின் தலைவராக உள்ள சீனித்தம்பி யோகேஸ்வரன், சம்பந்தனின் குறித்த முறைப்பாடு சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தற்காலிக பொதுச் செயலாளர் வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கத்தின் திகதி ஒதுக்கீட்டுடனான அனுமதிக்காக காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு கிளை மற்றும் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை தொகுதி கிளை தெரிவுகள் சம்பந்தமாகவும் முறைப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, கொழும்புக்கிளை தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் தலைமையில் நடைபெற்ற தெரிவில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மூன்று உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதேபோன்று காங்கேசன்துறை தொகுதிக்கான அங்கத்தவர்கள் தெரிவில் குறைபாடுகள் உள்ளதாக கட்சியின் தற்போதைய தலைவர் மாவை.சோ.சேனதிராஜா விசனம் வெளியிட்டுள்ளார். எனினும் அது தொடர்பில் இன்னமும் எழுத்து மூலமான முறைப்பாடு ஒழுக்காற்றுக் குழுவிடத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் தனது தொகுதிக்கு பல ஆண்டுகளாகப் போகாமல் முதுமையும் இயலாமையும் காரணமாக கொழும்பில் தங்கியுள்ள திரு சம்பந்தர் அவர்களது கடமைகளையும் பணிகளையும் திரு குகதாசனே கவனித்து வந்தார். திருமலையில் கட்சிக் கிளைகளைப் புனரமைத்து பல பணிகளை ஆற்றி வந்தவர் குகதாசனே. ஆனால் தற்போது பிரச்சனை என்னவென்றால் சம்பந்தரது மகன் சயந்தன் சம்பந்தன் தந்தையாரது இடத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக குகதாசனை ஓரங்கட்டி வருகின்றார். குறிப்பாகச் சொன்னால் வாரிசு அரசியலை முன்னெடுத்து வருகின்றார்.

இதே போன்று காங்கேசன்துறையில் மாவை சேனாதிராஜா தனது மகனை அரசியல் வாரிசாக வளர்த்து வருகின்றார். இது பல தமிழரசுக்கட்சித் தொண்டர்களை இடை நிலைத் தலைவர்களை அதிருப்தி அடைய வைத்துள்ளது. மாவை சேனாதிராஜாவின் மகன் மாமனிதர் ரவிராஜின் மகளைத் திருமணம் செய்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் தலைமை பதவியை கிழக்குக்கு ஏன் வழங்கக் கூடாது?

கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
– பனங்காட்டான் –

அடுத்த இரண்டு வாரங்களில் பிறக்கப் போகின்ற 2024 இலங்கையில் தேர்தல் ஆண்டாக பிரகடனமாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலும், நாடாளுமன்றத்துக்கான தேர்தலும் இவ்வருடத்தில் இடம்பெறுமென நம்பிக்கையூட்டும் வகையில் அறிவித்து வருகிறார் ரணில் விக்கிரமசிங்க. இவரது கடந்த கால வாக்குறுதிகளை அறிந்தவர்கள் தேர்தல் அறிவிப்பை முழுமையாக நம்புவதாக இல்லை.

இரண்டு தேர்தல்களில் ஒன்று இடம்பெறும். ஆனால் அது எதுவென்று கூற முடியாதென பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். இரண்டில் எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும் அதன் வெற்றி தோல்வியில் இவரது அணிக்கு முக்கிய வகிபாகம் இருக்கும்.

இம்முறையும் தமிழ் மக்களின் வாக்குகளே ஜனாதிபதி தேர்தல் முடிவை தீர்மானிக்கும் என்ற தோரணையில் சிலர் கருத்துகளை பரப்பி வருகின்றனர். இப்படியான எதிர்பார்ப்புகள் இருந்ததால் தான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் 65 லட்சம் சிங்கள வாக்குகள் கோதாவுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. இதற்கிடையில் தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்ற குரலும் வந்ததை விட போனது வேகமாயிற்று.

இப்போது தாயகத் தமிழர்களைப் பொறுத்தளவில் அவர்கள் எதிர்நோக்கும் முக்கியமான தேர்தல் தமிழரசுக் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்வது. எப்போதும் இல்லாதவாறு முதன்முறையாக இப்பதவிக்கு இருவரின் பெயர்கள் தாக்கலாகியுள்ளது. இவர்களில் ஒருவர் விலகிக் கொள்ளாவிடில் வாக்களிப்பு தேர்தலாக இடம் பெறுவது தவிர்க்க முடியாது போகும்.

கடந்த பொதுத்தேர்தலின் போது ஒருவர் தோளில் மற்றவர் கை போட்டவாறு கூட்டாக வாக்கு வேட்டை நடத்திய சிவஞானம் சிறீதரனும், எம்.ஏ.சுமந்திரனும் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடுகின்றனர். இது சில வேளைகளில் ஏற்கனவே சிதறுண்டு போயிருக்கும் கட்சியை அடிநிலைக்குக் கொண்டு செல்லலாம்.

கடந்த பொதுத்தேர்தலில் இவர்கள் இருவரும் தாம் வெல்ல வேண்டுமென்பதற்காக இணைந்து பரப்புரை செய்து வாக்குகளைப் பெற்று ஒருவாறு வென்றனர் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூன்றாவது இடம் அப்போதைய கூட்டமைப்பின் புளொட் பிரதிநிதியான சித்தார்த்தனுக்குக் கிடைத்தது.

இந்த வகையில் தாம் இருவருமே கட்சியின் தலைமைப் பதவிக்கு பொருத்தமானவர்கள் என்று இவர்கள் தமக்குள் நினைத்துக் கொண்டார்கள் போல தெரிகிறது. பொதுத்தேர்தலின் போது இரட்டையர்களாக மக்களுக்குக் காட்சியளித்தவர்கள் இப்போது எதிரெதிராக நிற்கின்றனர்.

1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி தனிக்கட்சியாக உருவான தமிழரசுக் கட்சிக்கு ஆங்கிலத்தில் பெடரல் (சமஷ்டி) கட்சி என்ற பெயருண்டு. .தன் நிறுவகத் தலைவர் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் காலத்துக்குக் காலம் மாறாத அடிப்படைக் கொள்கைகளுடன், பல பெயர் மாற்றங்களுக்குள்ளான தமிழரின் அரசியல் அணிக்கு தமிழரசுக் கட்சியே தலைமை வகித்து வந்தது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளை தமிழர் ஐக்கிய முன்னணி என பெயர் மாறி, வடக்கும் கிழக்கும் இணைந்த தனியாட்சிக் கோரிக்கையுடன் 1977 தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியானது. இந்தக் கோரிக்கையின் பலத்தால் வடக்கு கிழக்கில் பதினெட்டு ஆசனங்களை இலகுவாகக் கைப்பற்ற முடிந்தது.




2001ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவானது. 2004 தேர்தலின் போது இதன் தலைமைத்துவமும் தமிழரசுக் கட்சிக்கேயானது. இதனால் தமிழர் பிரச்சனைத் தீர்வு உட்பட அனைத்து விடயங்களுக்கும் உள்நாட்டு அரசியலிலும் சர்வதேச அரங்கிலும் இக்கட்சியே பிரதான இடத்தைப் பெற்றது.

இந்தப் பின்னணியில் பார்க்கையில் வளர்ச்சியும், தொய்வும் மாறி மாறி தேர்தல் வேளைகளில் ஏற்பட்டதைக் காணலாம். இருப்பினும் .தனை அழிந்து விடாது காப்பாற்ற வேண்டுமென்ற மனோபாவம் தமிழரிடத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது.

முக்கியமாக, வடக்கையும் கிழக்கையும் இணைத்ததான கட்சியின் செயற்பாடுகள், பிரதான பதவிகள் தெரிவின் போது .ரண்டு மாகாணங்களையும் சமத்துவமாக மதிக்கும் தன்மை என்பவை மட்டுமன்றி இதன் தூரப்பார்வையும் மக்களால் விரும்பப்பட்டது.

இதற்கு உதாரணமாக, கட்சியின் தலைமைப் பதவி இரண்டு மாகாணங்களுக்குள்ளும் முரண்பாடு ஏற்படாத வகையில் போட்டியின்றி, ஒருமனதாக கடந்த ஏழரை தசாப்தங்களாக தெரிவானதை குறிப்பிடலாம். அது மட்டுமன்றி தலைவர் மற்றும் செயலாளர் பதவிகள் இரு மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தெரிவானதையும் சுட்ட வேண்டும்.

இதுவரை திருவாளர்கள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், என்.ஆர்.இராஜவரோதயம், சி.மு.இராசமாணிக்கம், டாக்டர் இ.எம்.வி.நாகநாதன், அ.அமிர்தலிங்கம், இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் தலைவர்களாக பதவி வகித்துள்ளனர். இவர்களுள் சிலர் மூன்று தடவையும், இரண்டு தடவையும் இப்பதவி வகிப்பதற்கு கட்சிக்குள் விட்டுக் கொடுப்பு இருந்து வந்துள்ளது. என்.ஆர்.இராஜவரோதயம், சி.மு.இராசமாணிக்கம் ஆகியோர் வடக்கில் இடம் பெற்ற கட்சி மாநாடுகளுக்கு தலைமை தாங்கி பெருமை சேர்த்தனர்.

டாக்டர் இ.எம்.வி.நாகநாதன் கிழக்கில் கல்முனையில் இடம்பெற்ற மாநாட்டில் தலைமை தாங்கியிருந்தார். இது இரு மாகாணங்களையும் தமிழ்த் தேசிய இணைப்புக்கு அடையாளமாக அமைந்தது.

1949ம் வருடத்திலிருந்து இன்றுவரை வடக்கிலிருந்து ஐவரும் கிழக்கிலிருந்து மூவரும் தலைமைப் பதவியை அலங்கரித்துள்ளனர். ஒரு போதும் இப் பதவிக்கு போட்டியிருக்கவில்லை. இப்போது முதன்முறையாக இருவர் பெயரில் வேட்பு மனு தாக்கலாகியுள்ளது. இதில் எவராவது ஒருவர் விட்டுக் கொடுக்கவில்லையெனில் அது கட்சியையே பாதிக்கும். இருவரில் யார் வென்றாலும் கட்சியை வளர்ப்பதில் அனைவரும் இணைந்தே செயற்படுவோமென சுமந்திரன் இப்போதைக்குத் தெரிவித்திருந்தாலும், அவ்வாறே எல்லாம் சுபமாக முடியுமென்ற அரசியல் காலநிலை வீட்டுக்குள் இல்லை.

இரு தரப்பினரையும் .ணைத்து செயற்படும் ஆற்றலும் முதுமைத் தகைமையும் கொண்ட கட்சியின் மூத்த துணைத்தலைவரான சி.வி.கே.சிவஞானம், இப்போதைய தலைமைப் போட்டியில் ஒதுங்கியிராது சுமந்திரனைப் பிரேரித்தது பலரதும் புருவத்தை உயர்த்தியுள்ளது.

சி.வி.விக்கினேஸ்வரன் வடக்கின் முதலமைச்சராக இருந்தபோது அவரைப் பதவி நீக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அப்போதைய ஆளுனரிடம் சி.வி.கே.சிவஞானத்தினால் கையளிக்கப்பட்டது. எதிர்பாராதவிதமாக சுமந்திரனின் திருகுதாளத்தால் அத் தீர்மானம் தமது கையில் திணிக்கப்பட்டதாக திரு.சிவஞானம் அப்போது பலரிடமும் தெரிவித்திருந்தார்.

திரு. சிவஞானம் இப்போது அதே சுமந்திரனை ஆதரிப்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. அடுத்த மாகாணசபைத் தேர்தலில் .வரை முதலமைச்சராக்க சுமந்திரன் உறுதியளித்திருக்கலாம் என்பது முதலாவது. திரு.சிறீதரன் பல தடவை அபாண்டமான கருத்துகளை இவருக்கு எதிராகத் தெரிவித்ததால் அவரை தலைவராக அனுமதிக்கக் கூடாதென்பது சிவஞானம் அவர்களுடைய முடிவுக்கான இரண்டாவது காரணமாக இருக்கலாம்.

1987ல் திலீபன் உண்ணாவிரதம் இருந்த வேளையில் வடக்கு கிழக்குக்கு ஓர் இடைக்கால நிர்வாகம் அமைக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் தலைவர் பதவிக்கு திரு. சிவஞானத்தையே விடுதலைப் புலிகள் பரிந்துரைத்தனர். அதேசமயம் இச்சபைக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதிநிதிகள் எவ்வாறு நியமனமாக வேண்டுமென்பதையும் விடுதலைப் புலிகள் அழுத்தம் திருத்தமாக இலங்கை அரசுக்குத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் விடுதலைப் புலிகளின் செல்வாக்கை கிழக்கில் இழக்கச் செய்யும் வகையில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பெயர்ப்பட்டியலை மாற்றியமைத்ததால் திரு.சிவஞானம் இடைக்கால நிர்வாகத் தலைவர் பதவியை ஏற்க மறுத்தார். இது நிகழ்ந்த போது பதினெட்டு வயது மாணவனாக இருந்த சிறீதரன் உண்மையை அறியாது அதற்குப் புறம்பாக திரு.சிவ



ஞானத்தை இழிவுபடுத்தும் வகையில் சில கருத்துகளை தொடர்ந்து கூறி வந்தமையால் சுமந்திரனை ஆதரிக்கும் நிலைக்கு இவர் தள்ளப்பட்டிருக்கலாமென்ற கருத்து பல இடங்களிலும் பகிரப்படுகிறது.

எதுவானாலும், தமிழரது தலைமைப் பதவிக்கு போட்டி, வாக்களிப்பு, வெற்றி தோல்வி என்பவை இருக்கக்கூடாதென்பதே கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் மட்டுமன்றி பல தரப்பட்டவர்களின் நிலைப்பாடாகவுள்ளது. இதற்கான ஒரே வழி போட்டியில் இறங்கியுள்ள இருவரையும் ஒருவாறு ஒதுங்கச் செய்து, புதிய ஒருவரை மரபு முறைப்படி போட்டியின்றித் தெரிவு செய்வதே.

தமிழரசுக் கட்சியில் எழுதாத நியமம் என்பது தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளில் எப்போதும் ஒன்று வடக்குக்கும் மற்றது கிழக்குக்கும் இருக்க வேண்டுமென்பது. இதுவரை தலைமைப் பதவி நிரப்பப்பட்ட முறைமையின்படி பார்க்கின் இம்முறை கிழக்கு மாகாணத்துக்கே தலைமைப் பதவி கொடுக்கப்பட வேண்டும். இக்கருத்து உள்நாட்டில் மட்டுமன்றி புலம்பெயர்ந்த தமிழர் மத்தியிலும் மேலோங்கியுள்ளது.

கட்சியின் புதிய தலைவர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்ட மூத்த பிரமுகரும் முன்னாள் எம்.பியுமான திரு.சிறீநேசனை பலரும் விரும்புகின்றனர். அதேசமயம், நெருக்கடியான காலங்களில் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனுடன் இணைந்து பணியாற்றிய மாவை சேனாதிராஜாவை செயலாளராக நியமிக்கலாம் என்ற கருத்தும் பரவலாக ஓடிக்கொண்டிருக்கிறது.

போட்டிக்குத் தயாரான இருவரும் அதிலிருந்து விலகாவிடில் கட்சியின் ஒற்றுமை பாதிக்கப்படுவது மட்டுமன்றி, கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் தாங்கள் புறக்கணக்கப்படுவது போன்ற உணர்வும் ஏற்படும். இப்போது தேவை தமிழ்த் தேசிய சிந்தனையில் வடக்குக் கிழக்கை இணைத்து செயற்படுத்தக் கூடிய ஒரு தலைவரே. அந்தத் தலைமை இன்றைய நிலையில் கிழக்கிலிருந்து வருவதே மிக மிகப் பொருத்தமானது.

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

09 டிசம்பர் 2023 முதல் 15 டிசம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சின்னம்மா வடிவேலு

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வதிவிடமாகவும் சிக்காக்கோ அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது 31ம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு 08,09, 10ம் டிசம்பர் 2023 திகதிகளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தின ருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 40வது பிறந்த நாள் நினைவாக



### திரு ஈசாந்தன் இராமலிங்கம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு ஈசாந்தன் இராமலிங்கம் அவர்களது 40வது பிறந்த நாள் 20 டிசம்பர் 2023 புதன்கிழமை ஆகும். அன்றையதினம் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது துணைவியார் திருமதி லக்ஷனா ஈசாந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார். திரு ஈசாந்தன் அவர்களது பிறந்த நாளில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தின ருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை ஶ்ரீகாந்தராசா

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை ஶ்ரீகாந்தராசா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 12 டிசம்பர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை ஶ்ரீகாநதராசா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நாள் நினைவு நாள் 22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கந்தையா செல்லம்மா

அனலைதீவு 4ம்வட்டாரம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லம்மா அவர்களது 22வது ஆண்டு நினைவு தினம் 11 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கந்தையா செல்லம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல எம் பெருமான் ஐயனாரைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி பரமேஸ்வரன்

புங்குடுதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி பரமேஸ்வரன் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு தினம் 10 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லதம்பி பரமேஸ்வரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




08 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வதிவிடமாகவும் சிக்காக்கோ அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




09 டிசம்பர் 2023 சனிக்கிழமை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வதிவிடமாகவும் சிக்காக்கோ அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





09 டிசம்பர் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி வரதராஜன் பத்மகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கிருஷாந் வரதராஜனின் 30வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கிருஷாந் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




09 டிசம்பர் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செந்தாரி கிளின்ஸ் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செந்தாரி கிளின்ஸ் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




10 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வதிவிடமாகவும் சிக்காக்கோ அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி பரமேஸ்வரன் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 டிசம்பர் 2023 திங்கட்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லம்மா அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 டிசம்பர் 2023 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த திரு சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




13 டிசம்பர் 2023 புதன்கிழமை நாவலர் றோட் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி செல்வராணி பொன்னையா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



# வட கொரியாவை விட்டு உயிரை பயணம் வைத்து படகில் தப்பிய குடும்பம் கூறும் அதிர்ச்சித் தகவல்

வட கொரியாவில் இருந்த கிம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சாத்தியமற்றதாகக் கருதப்படும் ஒரு விஷயத்தை செய்தார். அவர் தனது குடும்பத்துடன் கடல் வழியாக வட கொரியாவை விட்டுத் தப்பி ஓடினார்.

தனது கர்ப்பிணி மனைவி, தாய், சகோதரரின் குடும்பத்தினர் மற்றும் தனது தந்தையின் சாம்பல் அடங்கிய கலசம் ஆகியவற்றோடு அவர் இந்தப் பயணத்தை ஆரம்பித்தார்.

இந்த ஆண்டில் நாட்டை விட்டு வெளியேறி தென் கொரியாவிற்கு வந்த முதல் நபர்கள் இவர்களே. கோவிட் பேரிடர் தாக்கியபோது, வட கொரியாவின் அரசாங்கம் பீதியடைந்து உலகின் பிற பகுதிகளோடு தங்களது நாட்டிற்கு இருந்த தொடர்புகளைத் துண்டித்தது. அதன் எல்லைகளை மூடியது மற்றும் வர்த்தகத்தை துண்டித்தது. ஒரு காலத்தில் அடிக்கடி மக்கள் நாட்டை விட்டு தப்பி ஓடும் சம்பவங்கள், இந்தத் துண்டிப்பிற்குப் பிறகு முற்றிலுமாக நின்றது.




கிம் பிபிசியிடம் பேசுகையில் வட கொரியாவில் மக்கள் பட்டினியால் இறக்கும் சம்பவங்கள் மற்றும் அடக்குமுறை அதிகரிப்பது உள்ளிட்ட புதிய விவரங்களை அவர் தெரிவித்தார். அவர் தனது முழு பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், சியோலில் உள்ள தனது குடும்பத்தைப் பாதுகாக்கவும் எங்களிடம் கேட்டுக் கொண்டார்.


பிபிசியால் கிம்மின் அனைத்து குற்றச்சாட்டுகளையும் சரிபார்க்க முடியவில்லை. ஆனால் பெரும்பாலான விவரங்கள் மற்ற ஆதாரங்கள் மூலம் நாம் இதற்கு முன்பு கூறியவற்றுடன் ஒத்துப் போகின்றன.

கிம் மற்றும் அவரது சகோதரர் தப்பிக்க முயன்ற அந்த இரவில் பலத்த புயல் காற்று வீசி கடல் கொந்தளிப்பாக இருந்தது. கடல் சீற்றத்தோடு இருக்கும் போது கடலோர காவல் படையினரால் கரையில் இருந்து வெகு தூரம் வர முடியாது என்பது கிம்முக்கு தெரியும். இப்படிப்பட்ட ஒரு இரவுக்காகத் தான் கிம் பல ஆண்டுகள் காத்திருந்தார்.

கிம்மின் சகோதரர் குழந்தைகளுக்கு தூக்க மாத்திரை வழங்கப்பட்டு அவர்கள் தூங்க வைக்கப்பட்டனர். அவர்கள் வேறொரு படகு ரகசியமாக நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு காவலர்களின் தேடுதல் விளக்குகளில் இருந்து தப்பிக்க கவனமாகச் சென்றனர்.

அவர்கள் படகை அடைந்ததும், பழைய அரிசி சாக்குகளுக்குள் குழந்தைகளை மறைத்து சாக்கு மூட்டைகளைப் போல ஓரமாக வைத்தனர். அதனுடன், தென் கொரியாவுக்கான அவர்களது பயணம் தொடங்கியது.

கிம்மும், அவரது சகோதரரும் கையில் ஆளுக்கொரு வாளை எடுத்துக் கொண்டனர். பெண்கள் தங்களது கைகளில் முட்டையில் ஓட்டை போட்டு அதில் மிளகாய் தூள் மற்றும் கருப்பு மணலை நிரப்பி கடலோர காவல் படையை எதிர்கொண்டால் அவர்களைத் தாக்கத் தயாராக இருந்தனர்.



கிம்மை தென் கொரியாவின் தலைநகர் சியோலில் காவல்துறையின் பாதுகாப்பில் அவர் இருந்த போது சந்தித்தோம். வட கொரியாவில் இருந்து தென் கொரியாவிற்கு தப்பி வருபவர்களுக்கான முகாமில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டு சில வாரங்கள்' தான் ஆகியிருந்தது.

வட கொரியாவில் இருந்த நிலைமை குறித்து அவர் கூறுகையில் கொரோனா தொற்றில் ஆரம்ப கால கட்டத்தில் மக்கள் மிகவும் பயத்தில் இருந்தனர். வடகொரியாவில் கோவிட் விதிகள் மிகவும் கடுமையாக இருந்தன. யாராவது விதியை மீறியதாகத் தெரிய வந்தால் காவல்துறையினர் அந்த கிராமத்தையே தனிமைப்படுத்துவார்கள். அங்கிருக்கும் மக்களால் வெளியே செல்ல முடியாது. முக்கியமாக அவர்களுக்கு உணவும் வழங்கப்படாது என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், `உணவில்லாமல் மக்கள் சிறிது காலம் பட்டினியால் அவதிப்பட்ட பின்பு, அரசு லாரியில் உணவு விநியோகம் செய்யும். அந்த உணவின் விலை குறைவாக இருப்பதால் மக்கள் அரசைப் பாராட்ட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.' என்று கிம் கூறினார்.

கொரோனாவின் தாக்கம் குறைந்த பின்பும் நீண்ட காலத்திற்கு இதே நிலைமை நீடித்தது என்றும் இது வழி மக்களை ஒடுக்குவதற்கான ஒரு முறையா என மக்களுக்கு சந்தேகம் எழத் தொடங்கியது என்றும் கிம் கூறினார். மேலும் பட்டினியால் நிறைய பேர் இறந்து போனதாகவும் கிம் கூறுகிறார். கடந்த பிப்ரவரி மாதம் ஒரு வயதான தம்பதியை கொலை செய்ததாக ஒருவர் கைது செய்யப்பட்டார். ஆனால், விசாரணையில் அவர்கள் பசியில் இறந்ததாகவும் அவர்களின் உடல்களை எலிகள் கடித்திருந்ததாகவும் தெரிய வந்ததாக கிம் தெரிவித்தார்.

இது தவிர தென் கொரியாவிற்கு ஆதரவாகச் செயல்படுவதாகத் தெரிய வந்தால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டத்தை வடகொரிய அரசு 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொண்டு வந்தது. இந்தக் காரணங்களால் மிகவும் வேதனைக்குள்ளான கிம், வட கொரியாவை விட்டு தப்பிக்க முடிவெடுத்ததாகக் கூறுகிறார்.

முதலில், கடலுக்குள் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி தேவைப்பட்டது. அருகிலுள்ள இராணுவ தளத்தைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டுள்ளார்கள். அங்கு பொதுமக்கள் மீன் பிடிக்க அனுப்பப்பட்டனர். பின்னர் அவை ராணுவ உபகரணங்கள் வாங்குவதற்காக விற்கப்படும். கிம்மின் சகோதரர் இந்தத் திட்டத்தில் சேர்ந்தார். இதற்கிடையில் கிம் அப்பகுதியில் ரோந்து சென்ற கடலோரக் காவலர்கள் மற்றும் பாதுகாவலர்களுடன் நட்பாகத் பழகத் தொடங்கினார். அவர்களின் இயக்கங்கள், நெறிமுறைகள் மற்றும் ஷிஃப்ட் முறைகள் பற்றிய தகவல்களை இரகசியமாகச் சேகரித்தார். இதன் மூலம் அவரும் அவரது சகோதரரும் இரவில் எப்போது படகை எடுத்துச் செல்ல முடியும் என்று அவர் முடிவு செய்தார்.

பின்னர் தான் அவருக்கு இருந்த மற்றொரு கடினமான பணி நினைவிற்கு வந்தது. வயதான தாயையும் மனைவியையும் தன்னுடன் சேரும்படி சமாதானப்படுத்துவது. இருவரும் வெளியேறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இறுதியில் சகோதரர்கள் தங்கள் தாயை சம்மதிக்கச் செய்தனர்.

எங்கள் தாய் கலக்கமடைந்து நிறைய அழுதார். ஆனால் இறுதியாக ஒப்புக் கொண்டார்' என்று கிம் கூறினார். அவர்கள் தப்பித்த பிறகு அதிகாரிகள் தங்கள் தந்தையின் கல்லறையை இழிவுபடுத்துவார்கள் என்று பயந்து கிம் மற்றும் அவரது சகோதரர் அவரது உடலைத் தோண்டி எடுத்தனர். பிறகு தோண்டிய இடத்தை மூடி விட்டு, அவர்களது தந்தையின் உடலை ஒதுக்குப்புறமாகக் கொண்டு சென்று எரித்து சாம்பலை எடுத்துக் கொண்டனர்.

அவர்கள் பின்னர் இருட்டில் கடக்க வேண்டிய கண்ணி வெடிகள் நிறைந்த இடத்தை ஆய்வு செய்தனர். அவர்கள் மருத்துவ மூலிகைகளை எடுப்பது போல் பாசாங்கு செய்து, அதன் வழியாக தெளிவான பாதையை வரைந்தனர். மக்கள் வெளியேறுவதைத் தடுக்க கடற்கரையோரத்தில் சமீபத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன. ஆனால் அங்கு குறைவான காவலர்கள் இருப்பதால், அது பாதுகாப்பான வழியாக இருந்ததாக கிம் கூறினார். மே 6ஆம் தேதி இரவு 10 மணிக்கு அவர்கள் படகில் பயணம் செய்தனர். அவர்கள் அனுமதிக்கப்பட்ட தூரம் வரை பயணம் செய்தவர்கள், அங்கிருந்து தொடர்ந்து சென்றனர். குறைந்த அலைகள் பாறைகள் மற்றும் கற்பாறைகளை வெளிப்படுத்தியிருந்தன.

அது பாதுகாப்பானது என்பதை உணர்ந்தவுடன் அவர்கள் நீரோட்டங்களின் பாதையில் முழு வேகத்தில் சென்றனர். ஒரு கப்பல் பின் தொடர்வதை கிம் பார்த்தார். ஆனால் அது அவர்களைப் பிடிக்க முடியவில்லை. சில நிமிடங்களில் அவர்கள் கடல் எல்லையைத் தாண்டினர். அந்த நேரத்தில், பதற்றத்தின் உச்சியில் இருந்தேன். நான் இடிந்து விழுவது போல் உணர்ந்தேன் என்று கிம் கூறினார்.

தென் கொரியாவின் யோன்பியோங் தீவை நெருங்கிய போது அவர்கள் டார்ச் லைட்டுகளை கரையை நோக்கி அடித்தனர். கிட்டத்தட்ட இரண்டு மணிநேரத்திற்குப் பிறகு கடற்படையால் மீட்கப்பட்டனர். எல்லாம் திட்டமிட்டபடியே நடந்தன. `பருவ நிலை எங்களுக்கு உதவியது போல் இருந்தது.' என்று அவர் கூறினார்.

கிம் தப்பித்த சம்பவம் அரிதானது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளதாக வட கொரியாவில் உள்ள லிபர்ட்டியைச் சேர்ந்த சொகீல் பார்க் கூறினார். அவர் கூறுகையில் கடல் வழியாக தப்பிக்க துல்லியமான திட்டமிடல், நம்ப முடியாத தைரியமும் வேண்டும். பல வருடங்களாக பல வட கொரியர்கள் கடல் வழியாக தப்பிக்க முயன்றனர். ஆனால் யாரும் வெற்றி பெறவில்லை.' என அவர் கூறினார்.

வட கொரியாவை விட்டு சீனா வழியாக தப்பிக்க நினைப்பவர்களுக்கு உதவுபவரான ஸ்டீபன் கிம் கூறுகையில், `பணக்காரர்கள் மற்றும் வலிமையான தொடர்புகள் இருப்பவர்களால் மட்டுமே வட கொரியாவை விட்டு தப்பிக்க முடியும். கொரோனாவிற்கு முன்பு வருடத்திற்கு வட கொரியாவில் இருந்து 1000 பேர் சீனாவிற்கு தப்பிச் செல்வார்கள். ஆனால், கொரோனாவிற்கு பின்பு கடந்த நான்கு ஆண்டுகளில் 20 பேர் மட்டுமே தப்பித்தனர்.' எனக் கூறினார்.

வட கொரியா தற்போது சீனா மற்றும் ரஷ்யாவுடனான தனது உறவுகளை ஆழப்படுத்துகிறது. அதே நேரத்தில் மேற்கு நாடுகளுடனான வட கொரியாவின் உறவு மோசமாக உள்ளது. இந்த நிலைமையால் மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காண்பது சர்வதேச சமூகத்திற்கு மிகவும் கடினமாகி விட்டது.


கிம்மின் குடும்பத்தினர் மீட்கப்பட்ட பிறகு, அவர்கள் வட கொரிய உளவாளிகள் அல்ல என்பதை தென் கொரியாவின் உளவுத்துறையிடம் விளக்க வேண்டும். பின்னர் அவர்கள் மீள்குடியேற்ற மையத்தில் தென் கொரியாவில் வாழ்வது பற்றிக் கற்பிக்கப்பட்டனர்.

கிம்மின் குடும்பம் அக்டோபர் மாதம் மீள்குடியேற்ற மையத்தில் இருந்து ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் குடியேறியது. அவரது மனைவிக்கு குழந்தையும் பிறந்தது. கிம்மின் தனது மனைவிக்கு தென் கொரியாவின் சப்வேக்களை பயன்படுத்தத் தெரியவில்லை என்றும் அதனால் அவர் வழி தவறித் தொலைந்து போயிருக்கிறார். இது அவரது மனைவியின் தன்னம்பிக்கையைக் குறைக்கிறது என அவர் கூறினார். ஆனால் கிம்முக்கு தென் கொரியாவில் வாழ்வது கடினமாக இல்லை.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது, அவர் ஆர்வத்துடன் எங்கள் பக்கத்தில் இருந்த மேசையிலிருந்து எனது ஏர் போட்ஸ் பெட்டியை எடுத்து, அதைத் தன் கையில் திருப்பினார். அது வயர்லெஸ் ஹெட்ஃபோன்கள் என நான் கூறியபோது அவர் நம்பவில்லை. நான் அதை என் காதுகளில் வைத்த பிறகு தான் அவர் முகத்தில் ஒரு புரிதல் அலை வீசியது. அவர் சிரித்தார்.

இது போன்ற பல ஆச்சரியங்கள் மற்றும் சவால்கள் அவர்களுக்கு காத்திருக்கிறது. இது அவற்றின் தொடக்கம் மட்டுமே. நன்றி:- பிபிசி







# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### 17-11-2023 வெள்ளிக்கிழமை முதல் 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் ரோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 16-11-2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 17-11-2023 வெள்ளிக்கிழமை - அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**

24-11-2023 வெள்ளிக்கிழமை, 25.11.2023 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**

01.12.2023 வெள்ளிக்கிழமை, 02.12.2023 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 10-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெறும்.

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், பேட்டை துள்ளுதல் படி ஏறி அபிஷேகம் செய்தல்**

25-12-2023 திங்கட்கிழமை, 26.12.2023 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2023 புதன்கிழமை தொடக்கம் 31.12.20223 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் நெய் அபிஷேகம் நடை பெறும்.

**பேட்டை துள்ளுதல்**

26-12-2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**

01-01-2024 திங்கட்கிழமை முதல் 15-01-2024 திங்கட்கிழமை வரை இடம்பெறும்.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**

15-01-2024 திங்கட்கிழமை



**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**

21-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.

**அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. ஆலயத்தினுள் கைத்தொலைபேசியை பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பதாயின் காரியாலயத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை



ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

## கனடா – அருள்மிகு
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

**பூசை நேரம்:**
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

**அம்பாள் அடியார்களே!**

## கனடா முத்துமாரியம்மன்
## அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

27 ஜனவரி 2024 சனிக்கிழமை கனடா முத்துமாரியம்மன் ஆலயத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# தமிழரசுக்கட்சி உடையுமா?

தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பதை தெரிவு செய்வதற்கு வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடக்கவிருக்கிறது. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி அது. அக்கட்சித் தலைவரை இதுவரை காலமும் தேர்தல் இன்றி ஏகமனதாக தெரிவு செய்து வந்தார்கள். அதாவது போட்டிக்கு ஆள் இருக்கவில்லை. ஆனால் இம்முறை போட்டி ஏற்பட்டிருக்கிறது. இப்போட்டிக்குக் காரணம் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அந்த பதவியை அடைய விரும்புவது தான்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் பட்டத்து இளவரசர் போல சுமந்திரனே தோன்றினார். அதை நோக்கி அவர் தன்னை வளர்த்துக் கொண்டார். உள்ளூராட்சி சபை, மாகாண சபை போன்ற எல்லா மட்டங்களிலும் அவர் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக் கொண்டார். அதற்கு முது தலைவராக இருந்த சம்பந்தரின் ஆசிர்வாதமும் இருந்தது. அதாவது பல ஆண்டுகளாகத் தலைமைப் பதவியை இலக்கு வைத்து திட்டமிட்டு உழைத்தவர் சுமந்திரன்.

அவரிடமிருந்த மொழிப்புலமை சட்டப் புலமை, நிதிப்பலம் போன்றவை காரணமாக அவர் திட்டமிட்டுத் தன்னுடைய நிலையை பலப்படுத்தி வந்தார் .சிறீதரன் அவருக்கு சவாலாக எழாதவரை அவர் தான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட வேண்டிய ஒரு தலைவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது சிறீதரனும் அவரும் இணைந்து செயல்பட்டார்கள். சிறீதரன் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். அது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது.

கட்சிக்குள் சுமந்திரனின் எழுச்சி என்பது கடந்த 14 ஆண்டுகளிலும் படிப்படியாக திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. சம்பந்தர் அதைத் தொடங்கி வைத்தார். கட்சியை தீவிரவாத நீக்கம் செய்ய வேண்டும், சிங்கள மக்களின் நன்மதிப்பை வென்றெடுக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து சம்பந்தர் உள்ளே கொண்டு வந்தவர் தான் சுமந்திரன்.

ஆயுதப் போராட்டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளிவிட்டது என்று சம்பந்தர் கருதினார்.ஒரு தீர்வை பெறுவதாக இருந்தால் சிங்கள மக்களின் ஒப்புதல் அவசியம் என்றும் அவர் நம்பினார்.எனவே சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு கொழும்பை மையமாகக் கொண்ட மொழியாளுமை கொண்ட சுமந்திரனைப் போன்றவர்கள் விக்னேஸ்வரனைப் போன்றவர்கள் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சுமந்திரன் விக்னேஸ்வரன் போன்றவர்களை சம்பந்தர் கட்சிக்குள் இறக்கியமை என்பது தற்செயலானது அல்ல. அவரிடம் அதற்கென்று தெளிவான ஒரு வழிவரைபடம் இருந்தது. அதன்படியே காரியங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனால் தான் சுமந்திரன் பட்டத்து இளவரசராக மேல் எழுந்தார்.

ஆனால் சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது. அவர் எதிர்பார்த்தது போல ஒரு தீர்வைப் பெற முடியவில்லை. அது மட்டுமல்ல அவர் உள்ளே இறக்கிய விக்னேஸ்வரன் அவருக்கு எதிராகத் திரும்பினார். அதன்பின் இறக்கப்பட்ட குகதாசன் எதிராகத் திரும்பி விட்டார். சுமந்திரன் சாணக்கியர் கூறியது போல நண்டாக மாறிவிட்டார். இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள்.அவர்கள் தகப்பனைத் தின்னிகள் என்று சாணக்கியர் கூறுவார். மொத்தத்தில் சம்பந்தர் ஒரு தோல்வியுற்ற தலைவராக ஓய்வு பெறப் போகின்றாரா? .

ஆனால் அவர் தமிழ் அரசியலைச் சீரழித்து விட்டார். கடந்த 14 ஆண்டுகளில் அவரால் உருப்படியான ஒரு தீர்வை பெற்றுத்தர முடியவில்லை. கூட்டமைப்பு என்ற ஐக்கிய கட்டமைப்பையும் பாதுகாக்க முடியவில்லை. அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலை. அவர் கடந்த 14 ஆண்டுகளாக திட்டமிட்டு முன்னெடுத்த அரசியல் வழியின் விளைவாக அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே சிதைவுகள் தொடங்கி விட்டன.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறீதரன் சுமந்திரனின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அதனால் தான் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். ஆயின் இப்பொழுது சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையே ஏற்பட்டிருப்பது தனிப்பட்ட முரண்பாடா? அல்லது கொள்கை முரண்பாடா? கூட்டமைப்புத் தேய்ந்து தமிழரசுக் கட்சியாகியதற்கு சுமந்திரனையே பலரும் குற்றஞ்சாட்டுவதுண்டு. சிறீதரனின் செல்வாக்கு அடித்தளமாக காணப்படும் கிளிநொச்சிக்குள் சுமந்திரன் தனக்கு



ஆதரவான ஒரு சிறு அணியை உருவாக்கி வைத்திருக்கிறார். ஏற்கனவே சிறீதரனோடு இருந்தவர்கள் அவர்கள். சிறீதரனின் கோட்டைக்குள் சுமந்திரன் ஊடுருவ முற்பட்டமையும், முரண்பாடுகள் தீவிரமடைய ஒரு காரணம்.

முதலில் இருவருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை பார்க்கலாம். சுமந்திரன் புரட்டஸ்தாந்து பாரம்பரியத்தில் வந்தவர்.கொழும்புமைய வாழ்க்கைக்கு அதிகம் பழக்கப்பட்டவர். கொழும்புமைய உறவுகளைக் கொண்டவர். ஒரு தமிழ் மக்களின் பிரதிநிதியாக கொழும்பில் தன் செல்வாக்கை மேலும் பலப்படுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஓர் ஊடக முதலாளி ஒருமுறை சொன்னார் தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருகிறார்.

அதேசமயம் தென்னிலங்கையில் அவர் அரசியல் உயர் குழாம், படைத்துறை உயர் குழாம், புத்திஜீவிகள், ஊடகங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக வளர்ந்திருக்கிறார். தென்னிலங்கை அரசியலில் அதிகம் செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் அரசியல்வாதி அவர் தான். தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் கொழும்பில் ஒரு பிரமுகராக வலம் வருகிறார் என்று.

தனது மொழிப்புலமை வாழ்க்கைப் பின்னணி காரணமாக சுமந்திரன் தென்னிலங்கையில் மட்டுமல்ல, உலக அளவில் ராஜதந்திரிகள் மத்தியிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் அதிகம் தெரியவந்த ஒருவராகக் காணப்படுகிறார்.

இப்பொழுது சிறீதரனைப் பார்க்கலாம். அவருடைய வேர் தீவுகளில் இருக்கிறது. அவர் தன்னைப் பலப்படுத்திக் கொண்டது கிளிநொச்சியில். போராட்டப் பாரம்பரியத்தில் வந்தவர். அதிகம் உள்ளூர் பண்புடையவர். உள்ளூர் உணர்வுகளை அதிகம் பிரதிபலிப்பவர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரான ஒரு காலகட்டத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்ற அடிப்படையில் அவருடைய பாரம்பரியம் அவருடைய வாழ்க்கை முறை போன்றன சுமந்திரனிடமிருந்து வேறுபாடானவை.

இந்த வேறுபாடுகளை சிறீதரனை ஆதரிப்பவர்கள் கொள்கை வேறுபாடுகளாக வியாக்கியானம் செய்கிறார்கள். சுமந்திரனின் அணுகுமுறை அதிகம் மிதவாதத் தன்மை மிக்கது இணங்கிச் செல்லும் தன்மை மிக்கது. அதனை அவருடைய கொழும்புமைய நிலையான நலன்கள் பெருமளவுக்குத் தீர்மானிக்கின்றன. ஆனால் சிறிதரனின் அணுகுமுறை அதிகம் எதிர்ப்புத்தன்மை மிக்கது. ஒப்பீட்டளவில் சுமந்திரனை விடத் தீவிரமானது.

எதுவாயினும் ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால் அதாவது தேர்தலை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றால், தேர்தலில் இருவருக்கும் இடையிலான முரண்பாடு கொள்கை முரண்பாடாகவே காட்டப்படும். சில சமயம் அது பிரதேச வாதமாகவோ அல்லது மத வாதமாகவோ மாறக்கூடிய ஆபத்துகளும் உண்டு.

அதை ஒரு கொள்கை வேறுபாடாக காட்டுவது சிறீதரனுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருக்கும். அனுகூலமாகவும் இருக்கும். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கும் கொழும்பு மைய தமிழ் நிலைப்பாட்டுக்கும் இடையிலான ஒரு மோதலாக அதை உருவகித்தால் தனக்கு அதிகரித்த ஆதரவு கிடைக்கலாம் என்று அவர் நம்பக்கூடும்.அதாவது கொள்கை அடிப்படையில் தன் பக்கம் பலமாக உள்ளது என்று அவர் நம்பக்கூடும்.







ஆனால் கடந்த 14 ஆண்டுகளிலும் அப்படியெல்லாம் கொள்கை வழியில் கட்சிகள் கட்டியெழுப்பப்பட்டனவா? தமிழ்மக்கள் கொள்கைகளுக்கு வாக்களிக்கிறார்கள் என்பது ஒரு டெம்ப்லட் வகை வசனமாக மாறி வருகிறதா? ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகள் தமது விசுவாசிகள் கூட்டத்தை கொள்கை அடிப்படையில் கட்டியெழுப்பியதை விட அதிகமாக எதிர்கால நலன்களின் அடிப்படையில் தான் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள்.

எந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு நின்றால் தனக்கு உள்ளூராட்சி சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது மாகாண சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது நாடாளுமன்றத்தில் ஆசனம் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்தே பெரும்பாலான தொண்டர்கள் தலைவர்களைச் சூழ்ந்து காணப்படுகிறார்கள். அதாவது தேர்தல் மைய நோக்கு நிலையில் இருந்து சிந்தித்தே பெரும்பாலான கட்சி வலைப் பின்னல்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. யாரோடு நின்றால் கட்சிக்குள் தங்களுடைய அடுத்தடுத்த கட்டப் பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்றுதான் பெரும்பாலான கட்சித் தொண்டர்கள் சிந்திக்கிறார்கள்.

கொள்கைகளால் உருகிப் பிணைந்த ஒரு கட்டமைப்பாக கட்சி இருந்திருந்தால் கட்சிக்குள் உடைவு வரும்பொழுது

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



அதை நாகரிகமாக கடந்து போக தெரிந்திருக்கும். சமூக வலைத்தளங்களில் நிகழும் மோதல்களில் தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் குறைந்தபட்ச அரசியல் நாகரீகமாவது பேணப்பட்டு இருந்திருக்கும்.

ஆனால் அதைக் காணவில்லை. இது தமிழரசு கட்சிக்குள் மட்டும் நடக்கவில்லை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் நடந்தது. மணிவண்ணன் பிரிந்தபோது அதைக் காண முடிந்தது. நேற்றைய தோழன் இன்றைய துரோகி. இவ்வாறு முன்னாள் தோழர்களை இந்நாள் துரோகிகளாக்கும் அரசியல் பண்பாடு புதியது அல்ல. இது தமிழ் ஆயுத அரசியலில் இருந்து மிதவாத அரசியல் வரை உண்டு.

ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் கொங்ரசுக்கும் இடையே மோதல்களின் போது, இரு கட்சி ஆதரவாளர்களும் மல முட்டிகளை பயன்படுத்துவார்கள். அதாவது மண் முட்டிகளுக்குள் மலத்தை நிரப்பிக் கொண்டு வந்து எதிராளியின் வீட்டு முற்றத்தில் உடைத்து விட்டுப் போவார்கள். அதே மலமுட்டிப் பாரம்பரியம் இப்பொழுது சமூக வலைத்தளங்களுக்கும் வந்துவிட்டது.

முன்பு கட்சிகளுக்கு இடையே அது இருந்தது. இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே வந்து விட்டது. அது தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் ஓர் அரசியல் பண்பாடு அல்ல. கொள்கைப் பற்றுறுதி இருந்தால் அப்படியெல்லாம் பொது வெளியில் விமர்சனங்கள் வராது. தமிழ்க் கட்சிகளின் விசுவாசக் கட்டமைப்புக்கள் பெருமளவுக்கு கொள்கையை விடவும் எதிர்காலப் பதவி உயர்வுகளை மையமாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டவை தான்.

இப்படிப்பட்டதோர் அரசியற் சூழலில் தமிழரசுக் கட்சிக்குள், தலைவருக்கான ஒரு தேர்தல் நடந்தால்,அது தமிழரசியலின் ஜனநாயகச் செழிப்பை நிரூபிக்குமா? அல்லது தேசத் திரட்சியை உடைக்குமா? தேர்தலில் யார் வென்றாலும் குறிப்பாகக் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சிக்குள் உடைவு ஏற்படுமா?

# பிரித்தானியாவின் பதில் என்ன?

இலங்கையில் தமிழர்கள் மற்றும் மனித உரிமைகள் நிலை தொடர்பாக, பிரித்தானிய பாராளுமன்றத்தில் கடந்த 5ஆம் திகதி ஒரு விவாதம் இடம் பெற்றிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டேயினால், கொண்டு வரப்பட்ட ஒரு பிரேரணையின் அடிப்படையில்– பிற்பகல் 2.30 மணி தொடக்கம், 4 மணி வரை, சுமார் ஒன்றரை மணி



நேரம் அந்த விவாதம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு முன்னதாக, இலங்கை தமிழர்கள் மற்றும் மனித உரிமைகள் என்ற தலைப்பில் ஒரு ஆவணம் தயாரிக்கப்பட்டு, அது பிரித்தானிய பாராளுமன்ற நூலக இணையத்தளத்தில் டிசெம்பர் முதலாம் திகதி பதிவேற்றப்பட்டது.

அதேவேளை, இந்த விவாதம் நடப்பதற்கு முன்னர், அவசர அவசரமாக லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு ஆவணத்தை தயாரித்து அனுப்பியிருந்தது. போர்க்காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோஹித்த போகொல்லாகம இப்போது லண்டனில் இலங்கைத் தூதுவராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

அவர் இந்த ஆவணத்தின் மூலம் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தை ஈர்க்க முற்பட்டார். வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் இலங்கை தொடர்பான விவாதம் நடப்பதற்கு முதல் நாள் அவர் ஐ.நா அமைதிப்படை தொடர்பான கூட்டத்தில் பங்கேற்பதற்காக துருக்கியின் அங்காராவுக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார்.

இதனால் அவர் லண்டனில் இல்லாத நிலையில் தான் பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதம் இடம் பெற்றது. இலங்கைத் தூதரகத்தினால் பிரித்தானிய எம்.பிக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆவணத்தில், இரண்டு முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை மறு ஆய்வுக்குட்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்பது ஒன்று.

காணாமல் போனோருக்கான பணியகம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது, அது காணாமல் போனோர் தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொடுக்க உதவுகிறது, காணாமல்போன மூவர் இறந்து போனதையும், 16 பேர் உயிருடன் இருப்பதையும் கண்டு பிடித்துள்ளது என்பது இரண்டாவது விடயம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் விடயத்தில் அரசாங்கம் போதிய அக்கறை செலுத்தவில்லை என்பது உலகறிந்த உண்மை. அடுத்து, காணாமல் போனோருக்கான பணியகம் மீது பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை வைத்திருந்தால் அவர்கள் ஏன் வீதி வீதியாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கப் போகிறார்கள்?

காணாமல் போனதாக 22 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் பதிவாகியுள்ள நிலையில் 3 பேர் இறந்ததையும், 16 பேர் உயிருடன் இருப்பதையும் கண்டு பிடித்திருப்பதாக சாதனைப் பட்டியல் கொடுப்பதையிட்டு அரசாங்கம் வெட்கப்படவில்லை. இந்தக் கணக்கே, அந்தச் செயலகத்தின் செயற்திறன் எந்தளவுக்கு மோசமாக இருக்கிறது என்பதை துலாம்பரமாக காட்டுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த ஆவணம் பிரித்தானிய பாராளுமன்ற விவாதத்தின் போது, உறுப்பினர்களால் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உக்ரேன் போர், காஸா மோதல்களுக்குள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக உலகம் தலையை வைத்துக் கொண்டிருக்கும் நிலையில், இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து சர்வதேச அளவில் பெரிதாக எந்த கவனமும் செலுத்தப்படவில்லை. அதற்கு முன்னர் கொவிட் தொற்றும், இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், தமிழர்களுக்கான நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் உரிமைகள் சார்ந்த விடயங்களை பின்னுக்குத் தள்ளி விட்டன.

இதனால் பலரும் மறந்து போயிருந்த பல்வேறு விடயங்களை வெளிப்படுத்துவதற்கு, பிரித்தானிய பாராளுமன்றத்தில் இடம்பெற்றிருக்கும் விவாதம், உதவியிருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், பௌத்தமயமாக்கல், இராணுவமயமாக்கல், தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமை மறுக்கப்படுவது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக கைதுகள் இடம்பெறுவது, செயற்பாட்டாளர்கள் கண்காணிக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் என நீண்டு செல்லும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பிரித்தானிய பாராளுமன்ற விவாதத்தில் கவனத்தில் எடுக்கப்பட்டது.

போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னரும் இராணுவ மயமாக்கல் முன்னெடுக்கப்படுவது பிரித்தானியாவினதும், சர்வதேசத்தினதும் கூட்டுத் தோல்வி என்று தனது உரையில் குறிப்பிட்டிருந்தார், தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டோனல்.

இலங்கையில் போர்க்குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அமெரிக்காவும் கனடாவும் தடைகளை விதித்திருப்பதைப் பாராட்டிய அவர், அதுபோல பிரித்தானியாவும் தடைகளை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

குறிப்பாக வர்த்தக தடைகள், வரிகளின் ஊடாக இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். போர்க்குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக– அமெரிக்கா மற்றும் கனடா ஆகியன போன்று பிரித்தானியாவும் தடைகளை விதிக்க வேண்டும் என்று இந்த விவாதத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா உள்ளிட்டவர்களின் பெயர்களும் இதன்போது குறிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. கொன்சர்வேட்டிவ் கட்சியின் உறுப்பினர் எலியட் கோல்பேர்ன் உரையாற்றிய போது, வடக்கு கிழக்கு இராணுவ மயப்படுத்தப்பட்டிருப்பதாகவும், இலங்கை இராணுவத்தின் 20 டிவிசன்களில் 16 டிவிசன்கள், இந்தப் பகுதிகளில நிறுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டதுடன் பிரித்தானியாவின்.. நிலையான மற்றும் நீடித்த அமைதியை உருவாக்குவதற்கு இராணுவமய நீக்கம் முக்கியமானது என்றும் வலியுறுத்தினார். சர்வதேச நாணய நிதியம், நிதியை விடுவிப்பதற்கு இலங்கையின் பாதுகாப்புச செலவினங்களை குறைக்குமாறு நிபந்தனையை முன்வைத்து வலியுறுத்த வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்த விவாதத்தில் உரையாற்றிய உறுப்பினர்கள் பலரும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தைத் தாண்டிய கடுமையான



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



நடவடிக்கைளை வலியுறுத்தியிருக்கின்றனர்.

பிரித்தானியாவும், ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை உள்ளிட்ட வர்த்தகச் சலுகைகளை முன்னிறுத்தி அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்றும், பொருளாதார மற்றும் பயணத் தடைகளை விதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விவாதத்தில் பதிலளித்துப் பேசிய, பிரித்தானியாவின் வெளிவிவகார, பொதுநலவாய அபிவிருத்திக்கான பாராளுமன்ற இராஜாங்க அடிநிலைச் செயலாளர், லியோ டொசெர்ட்டிஇலங்கையில் குறிப்பாக தமிழர்களின் மனித உரிமைகள் நிலை குறித்து பிரித்தானியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்று கூறியிருந்தார்.

சர்வதேசத்துக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை மீறுகிறது என்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்துகிறது என்றும் தமிழ்ச் சமூகத்தினர் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவது எங்களுக்கு தெரியும் என்றும்,

வடக்கு கிழக்கில் படையினரின் கண்காணிப்புகள் அச்சுறுத்தல்கள் தொடர்வது பற்றி (22ம் பக்கம் பார்க்க)


சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# உலகத்தமிழர் பேரவையின் இலங்கை வருகை?

உலகத் தமிழர் பேரவையின் தலைமையில் புலம்பெயர் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்திருக்கின்றனர். சுரேன் சுரேந்திரன் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவானது, ஜனாதிபதி மற்றும் பல்வேறு தரப்பினரை சந்திக்கவுள்ளதான செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதில் முக்கியமானது, அவர்கள் அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பௌத்த மதபீடங்களை சந்திக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. செய்திகளில் குறிப்பிட்டது போன்று, அவர்கள் பௌத்த மதபீடங்களை சந்தித்தால், அது ஒரு வரலாற்று நிகழ்வாக அமையும். இலங்கையின் சிங்கள பௌத்த கட்டமைப்புகளை பொறுத்த வரையில், புலம்பெயர் அமைப்புகள் அனைத்தையுமே, அவர்கள் விடுதலைப்புலிகளின் நீட்சியாகவே நோக்குகின்றனர்.



இன்றுள்ள முன்னணி புலம்பெயர் அமைப்புகளில் செயலாற்றும் அனைத்து நபர்களும், ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைமையிலான ஆயுத இயங்கு நிலையை ஆதரித்தவர்கள் தான், நியாயப்படுத்தியவர்கள் தான். விடுதலைப் புலிகளை ஆதரிப்பதை ஒரு அரசியல் கொள்கை நிலைப்பாடாகக் கொண்டவர்கள் தான். இதில் இரகசியம் ஒன்றுமில்லை.

அது அன்றைய நிலைமை. அனைத்து அரசியல் தீர்மானங்களையும் குறித்த அரசியல் சூழலின் ஊடாகவே நோக்க வேண்டும். போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிய அரசியல் சூழ்நிலையை புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய தேவையை பலரும் உணர்ந்தனர்.

இதில் முதன்மையானது உலகத் தமிழர் பேரவை. உலகத் தமிழர் பேரவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தது போன்ற பலமான நிலையில் இப்போது இல்லாது விட்டாலும் கூட உலகத் தமிழர் பேரவைக்கு இராஜதந்திர சமூகத்தினர் மத்தியில் கணிசமான அங்கீகாரம் உண்டு. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் தான், அவர்களால் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடன் ஊடாட முடிகின்றது.

யுத்தம் முடிவுற்று 14 வருடங்களில் அவ்வாறானதொரு அங்கீகாரத்தை ஏனைய அமைப்புகளால் அடைய முடியவில்லை. யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, தலைமையிலான மகிந்த ராஜபக்ச நிர்வாகம், பல புலம்பெயர் அமைப்புகளையும், நூற்றுக்கணக்கான தனிநபர்களையும் பயங்கரவாதத்திற்கு துணை போவபவர்கள் என்று கூறி தடை செய்திருந்தது. அதில் உலகத் தமிழர் பேரவையும் ஒன்று. 2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மைத்திரிபால ரணில் நிர்வாகம், குறிப்பிட்ட புலம்பெயர் அமைப்புகள் மீதான தடைகளை நீக்கியது. பின்னர் கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றிய போது, மீண்டும் குறித்த அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவிடம் அதிகாரம் கை மாறியதைத் தொடர்ந்து, மீளவும் குறித்த அமைப்புகள் மீதான தடைகள் நீக்கப்பட்டன. இது ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது. அதாவது, கொழும்பின் நிர்வாகத்திடம் புலம்பெயர் சமூகம் தொடர்பில் தெளிவான கொள்கை நிலைப்பாடு இல்லை. ஒவ்வொரு ஆட் சியாளரும் தங்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்பவே தமிழ் புலம்பெயர் அமைப்புகளை அணுக முற்படுகின்றன. இந்த விடயத்தை உலகத் தமிழர் பேரவை அரசாங்கத்திடம் உறுதியாக முன் வைக்க வேண்டும். அனைத்து புலம்பெயர் அமைப்புகள் மீதான தடைகளையும் அரசாங்கம் நீக்க வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க உலகத்தோடு ஊடாடும் ஆர்வத்தை காண்பிக்கும் ஒரு அரசியல்வாதி. குறிப்பாக மேற்குலகத்துடன் இணைந்து பயணிக்கும் கொள்கை நிலைப்பாட்டை கொண்டவர். இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் புலம்பெயர் சமூகத்துடன் ஊடாடும் ஆர்வத்தை காண்பித்திருந்தார். நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற சூழலில், புலம்பெயர் சமூகத்துடன் ஊடாடும் தேவை கொழும்புக்கு ஏற்பட்டிருக்கின்றது.



மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் புலம்பெயர் சமூகங்கள் கணிசமான தாக்கத்தை செலுத்தி வருகின்றன. கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கின்ற போதே, புலம்பெயர் சமூகத்துடன் உரையாடும் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் கோத்தாபய ராஜபக்ஷ, அதனை முன்னெடுக்கவில்லை. மேலும் ராஜபக்ஷவுக்களோடு உரையாடக்கூடிய நிலையில் தமிழ் புலம்பெயர் சமூகமும் இல்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் தற்போது, உலகத் தமிழர் பேரவையின் தலைமையில் புலம்பெயர் பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் இடம் பெற்றுள்ளது. நாடு அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை எதிர் கொள்ளவுள்ள நிலையில், உலகத் தமிழர் பேரவையின் வருகை அதிக கவனிப்புக்குரியதாகும். புலப்பெயர்வு தமிழ் அரசியலில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. இதில் சாதகமான தாக்கங்களும் உண்டு, பாதகமான தாக்கங்களும் உண்டு. விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, அனைத்தையும் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவையே தமிழர்களுக்கு முன்னால் இருந்தது. அதாவது, சுயவிமர்சனத்துடன் விடயங்களை அணுகுவதன் ஊடாகவே, தமிழ் மக்களின் நலனை வெற்றி கொள்வதற்கான புதிய வழிகளை கண்டடைய முயற்சிக்கலாம் என்பதே யதார்த்தமாக இருந்தது. இந்த அணுகுமுறையில் புலம் பெயர் அமைப்புகளுக்கு பிரதான பங்கிருந்தது. ஆனால் அதனை புலம் பெயர் அமைப்புகள் சரியாக முன்னெடுக்கவில்லை. புலம்பெயர் குழுக்கள் தங்களுக்குள் யார் சரியென்னும் போட்டியில் ஈடுபட்டு, புலம்பெயர் சூழலுக்குள்ளும் பிளவுகளை ஏற்படுத்தி, அதன் தொடர்ச்சியாக தாயக அரசியல் பரப்பிலும் குழப்பங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தன. இன்று பின்நோக்கி பார்த்தால், கடந்த 14 வருடகால புலம்பெயர் அரசியல் லொபி வெற்றி பெறவில்லை. அதேவேளை தாயக அரசியல் பரப்பில் இயங்கிய தமிழ் கட்சிகளாலும் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. ஆகக் குறைந்தது, தாயக அரசியல் பரப்பிலுள்ள தமிழ் தேசிய கட்சிகளும் புலம் பெயர் அமைப்புகளும், ஒரு நேர்கோட்டில் கூட பயணிக்க முடியவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையின் தன்மை முன்னரைப் போன்று இல்லை. வடக்கு, கிழக்கின் தமிழ் மத்தியதர வர்க்கத்தினர் நாட்டைவிட்டு வெளியேறுவதிலேயே நாட்டம் காண்பிக்கின்றனர். வழமை போல் சடங்காசாரமான தமிழ் தேசிய சுலோகங்களில் மக்கள் பெரியளவில் நாட்டம் காண்பிக்கவில்லை. காரணம் புதிய பிரச்சினைகள், புதிய தலை முறையின் எதிர்பார்ப்புகள். பொருளாதார வெள்ளம் தலைக்கு மேல் சென்றுவிட்டது.

இது நமக்கு மட்டுமான பிரச்சினையில்லை. உலகளவிலும் தாராளவாத ஜனநாயக அரசியல் பெரியளவில் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. சீனாவின் எழுச்சி, இதுவரையான உலக ஒழுங்கின் மீது கேள்விகளை முன்வைக்கின்றது. சிறிய நாடுகளோ, அனைவரையும் சமாளித்துச் செல்லும் உபாயங்கள் தொடர்பில் மட்டுமே சிந்திக்கின்றன. விழுமியங்களை முன்னிலைப்படுத்தும் அரசியல் இரண்டாம் பட்சமாகி வருகின்றது.

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இலங்கை அவ்வாறானதொரு அரசியல் அணுகுமுறையின் மீதே நாட்டம் கொள்கின்றது. இந்த நிலையில், தமிழ் மக்கள், வெறும் தமிழ் தேசிய சுலோகங்களின் வழியாக உலகை எதிர்கொள்ள முடியாது. புதிய அணுகுமுறைகள் தேவை. புதிய முகங்கள் தேவை.

இந்தப் பின்புலத்தில் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் முன்னேறிய பகுதி, அரசியல் யதார்த்தங்களை புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற்பட வேண்டும். இலங்கைக்குள் சாத்தியமான அனைத்தையும் பரிசீலிக்கும் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். தாயக அரசியல் சூழலுக்குள் மேலும் பிளவுகளை ஏற்படுத்துவதற்கும் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்குமான ஊக்குவிப்புகளில் புலம்பெயர் அமைப்புகள் ஈடுபடக்கூடாது.

உலகத் தமிழர் பேரவையின் நகர்வுகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையாளரின் வாதமாகும். மாரியிலும் கோடையிலும் ஒரே கண்ணாடியின் ஊடாக வெளியுலகை பார்க்கக்கூடாது. அந்தக் காலத்திற்கு ஏற்றவாறான கண்ணாடி அவசியம். உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புகள் மீதும் சில புலம்பெயர் குழுக்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றன. இவ்வாறான அணுகுமுறைகள் வேண்டுமானால் ஆரம்பத்தில் வெளி வந்திருப்பதற்கு காரணங்கள் இருக்கலாம்.

ஏனெனில் அன்றைய சூழலில் எந்த வழியால் செல்வது என்பதற்கு ஏராளமான பதில்கள் இருந்தன. ஆனால் இப்போது எந்த வழியும் இல்லையென்பது தெட்டத் தெளிவாக தெரிந்துவிட்டது. இனியும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதை விடுத்து, இன்றைய சூழலை எந்தளவு உச்சமாக பயன்படுத்தலாம் என்பது தொடர்பில் மட்டுமே சிந்திக்க வேண்டும்.

உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புகள் மீது குற்றம் சாட்டுவதற்கு மாறாக, அவர்களின் முயற்சியை ஊக்குவிக்க வேண்டியதே இன்றைய தேவையாகும். அதேவேளை உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புகள், தாயக அரசியல் பரப்பில், யதார்த்தமான அரசியல் முன்னெடுப்புகளை ஊக்குவிக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறைகளை முன் வைப்பவர்களுக்கு பக்க பலமாக செயற்பட வேண்டும்.

தாயக கட்சிகளின் வரையறைக்குள் தங்களை கட்டுப்படுத்தி விடக் கூடாது. அனைத்து கட்சிகளையும் சமநிலையில் அணுகி அவர்கள் அனைவரையும் இணைக்கும் பாலமாக தொழிற்பட வேண்டும். அப்போதுதான் புலம்பெயர் சமூகத்தினால் காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

# சீனாவின் கொழும்புத் துறைமுக நகரத்திற்கு ஆதரவளித்த பிரிட்டன் பிரதமர் இலங்கைக்கு எதிராக தடைகளை விதிப்பாரா? மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாகக் கேள்வி!

இலங்கையில் சீனா முன்னெடுக்கும் கொழும்புதுறைமுகநகர திட்டத்திற்கு ஆதரவளித்த பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரூன் இலங்கைக்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை விதிப்பாரா என சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இலங்கையை சேர்ந்த அமைப்புகளும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் கூட்டாக கேள்வி எழுப்பியுள்ளன

இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தடைகளை விதிப்பதா என்ற உடனடி தீர்மானத்தை பிரிட்டனின் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட்கமருன் எடுக்க வேண்டும் என எட்டு மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கையில் சீனாவின் முதலீட்டில் சீன நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் சர்ச்சைக்குரிய கொழும்புதுறைமுக நகர திட்டத்தினை சர்வதேச அளவில் ஊக்குவிப்பதற்காக கமரூன் ஈடுபடுத்தப்பட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே இந்த வேண்டுகோள் வெளியாகியுள்ளது.

மனித உரிமை அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் இலங்கையின் ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளான முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திரசில்வா மிகச்சமீபத்தில் ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிராக தடைகள் குறித்த இரண்டு ஆவணங்களை கையளித்துள்ளது.

இரண்டு ஆவணங்களும் டிசம்பர் 10 ம் திகதி சர்வதேச மனித உரிமை தினத்திற்கு முன்பாக முடிவிற்காக காத்திருக்கின்றன.

கடந்த வருடம் நவம்பரில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகளை தடுப்பது தொடர்பான உச்சிமாநாட்டில் மோதல் தொடர்பிலான பாலியல் வன்முறைகளுடன் தொடர்புபட்டிருந்தவர்கள் என குற்றம்சாட்டப்பட்ட தனிநபர்களுக்கு எதிரான தடைகளிற்கு முன்னுரிமை அளிப்பேன் என பிரிட்டன் உறுதியளித்திருந்தது.

மிக மோசமான தடுப்பு முகாமான ஜோசப் முகாமிற்கு பொறுப்பாகயிருந்த




மைக்காக சவேந்திர சில்வாவிற்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை ஏன் விதிக்க வேண்டும் என்பதற்கான வலுவான ஆதாரங்களை நாங்கள் முன்வைத்துள்ளோம் இந்த முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என

பாலியல் வன்முறை சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பல தமிழர்கள் தற்போது பிரிட்டனில் புகலிடம் பெற்றுள்ளனர். பாலியல் வன்முறையை முடிவிற்கு கொண்டு வருவது அதற்கு காரணமானவர்களை பொறுப்புக் கூறச் செய்வது குறித்து கடந்த வருடம் பிஎஸ்விஐ முயற்சியில் பிரிட்டன் வாக்குறுதியளித்துள்ளது காரணமாக

சர்வ தேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் ஐநா ஏற்படுத்திய விசாரணை குழுவில் ஜஸ்மின் சூக்கா இடம் பெற்றிருந்தார்.

இலங்கையில் பாலியல் வன்முறை சித்திரவதைகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக பிரிட்டன் நடவடிக்கை எடுக்காதது ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு யுத்தத்தின் இறுதியில் இரத்தக்களறி மிகுந்த தருணங்களிற்காகவும் எனினும் அவருக்கு தகவல் கிடைத்ததால் அவருக்கு முன்கூட்டியே தகவல் வழங்கப்பட்டதால் அவர் தனது வீட்டிலிருந்து தப்பி வெளியேறி இலங்கைக்கு சென்றார்.

மீண்டும் 2019 இல் ஐடிஜேபியும் சர்வதேச நீதிக்கான அவுஸ்திரேலிய நிலையமும் அவுஸ்திரேலியாவில் அவருக்கு எதிராக முறைப்பாடுகளை சுமத்தின அவர் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்டு சுதந்திரமாக வந்து போகின்ற நாடாக அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

இதன் பின்னர் தடைகளிற்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன 2022 இல் அவுஸ்திரேலியா அது குறித்து நடவடிக்கை எடுக்க மறுத்தது.

ஜகத்ஜெயசூரிய குறித்த ஆதாரங்கள் பிரிட்டன் அமெரிக்க அரசாங்கங்களிடமும் கையளிக்கப்பட்டுள்ளன ,எனினும் இந்த நாடுகள் தங்கள் நடவடிக்கைகள் குறித்து இன்னமும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

டிசம்பர் ஐந்தாம் திகதி பிரிட்டனின் ஸ்கொட்டிஸ் தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இலங்கையும் மனித உரிமைகளும் என்ற விவாதத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அனைத்து கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டனர்.

# இளம் கிரிக்கட் வீரர் ரிக்ஷியுதனுக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவு




கொழும்பு இந்துக் கல்லூரியின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரரான 10 வயது ரிஷியுதனின் குறிப்பிடத்தக்க திறமைக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் (CTC) தமது ஆதரவை வழங்குவதாக அறிவிதுள்ளது சமீபத்தில் நடந்த பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டியில், ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டம் கூட விட்டுக் கொடுக்காமல் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார் .

இந்த சாதனையை பாராட்டுவதற்காக கனடிய தமிழ் காங்கிரஸ் முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான ராஜ் தவரட்ணசிங்கம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதி ரிஷியுதனின் இல்லத்திற்குச் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், கிரிக்கெட் மீதான அவரது ஆர்வத்திற்கு கனடிய தமிழ் காங்கிரஸ் உதவி செய்யும் எனவும் தெரிவித்தார்

இதன் போது ரிஷியுதனின் குடும்பத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கனடிய தமிழ் காங்கிரஸ் குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான முச்சக்கர வண்டியின் குத்தகையை முழுமையாக செலுத்தியது, இது அவர்களின் நிதிச் சுமைகளைத் குறைப்பதுடன் ரிஷியுதனின் கிரிக்கெட் கனவுகளை அடைவதற்கு ஆதரவான சூழலை ஏற்படுத்தும் 19வது வயதில் இலங்கை தேசிய அணிக்காக விளையாடும் ரிஷியுதனின் கனவிற்கு கனேடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என ராஜ் தவரட்ணசிங்கம் ரிஷியுதனின் பெற்றோரிடம் உறுதியளித்தார்.

கனேடிய தமிழ் காங்கிரஸ், தமிழ் சமூகத்தில் உள்ள திறமைகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது மற்றும் கலாச்சார பெருமை மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் விளையாட்டுகளின் முக்கிய பங்கை ஒப்புக் கொள்கிறது.

ரிஷியுதன் போன்ற இளம் திறமையாளர்களின் கனவுகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை வலியுறுத்தி கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவிற்காக எமது அமைப்பு நன்றி தெரிவிக்கிறது.

## ஒன்ராறியோ அரசு யோர்க் பிராந்தியத்தில் வாகனத் திருட்டை எதிர்த்துப் போராட 900,000 முதலீடு செய்கின்றது

காவல்துறைக்கு உதவும் வகையில், ஒன்ராறியோ அரசாங்கம், யார்க் பிராந்தியத்தில் வாகன திருட்டை எதிர்த்துப் போராடுவதற்கு $900,000 முதலீடு செய்துள்ளது. இதற்கான அவசியம் என்ன? யார்க் பிராந்தியத்தில் 2019ஆம் ஆண்டிலிருந்து வாகனத் திருட்டு 200வீதம் அதிகரித்துள்ளது. 2023இல் 3,300க்கும் மேற்பட்ட திருடப்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 90வீத திருட்டுகள், பிராந்தியத்தின் தெற்குப் பகுதியில் நடந்துள்ளன. 2014 முதல் 2021 வரை மாகாணம் முழுவதும் வாகனத் திருட்டு 72மூ அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 14வீதம் அதிகரித்துள்ளது.

Markham-Thornhill ஐப் பாதுகாக்கும் முயற்சியில், கார் திருட்டை எதிர்த்து ஒன்ராறியோவின் $18 மில்லியன் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக யார்க் பிராந்திய காவல்துறைக்கான சமீபத்திய நிதியுதவி வழங்குகிறது. இந்த வலுவான முன்முயற்சி, சிறப்பு குழுக்கள் மற்றும் மூலோபாய கூட்டாண்மைகளுடன், ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலையமைப்புகளை அகற்றுவதற்கும் சமூக பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் மன அமைதியை வழங்குவதற்கும் எங்கள் வலுவான உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது என்று மாகாண பாராளுமன்ற உறுப்பினர் திரு லோகன் கணபதி கூறினார். உங்கள் பாதுகாப்பு எங்கள் ஒண்டாரியோ அரசாங்கத்தின் முக்கிய நோக்கம், மேலும் எங்கள் சமூகத்தில் வாகனத் திருட்டை எதிர்த்து நடவடிக்கை எடுப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# படைக்குள் உருவாகும் குழப்பம்

– சுபத்ரா –

போருக்குப் பின்னரான விளைவுகளை இலங்கை இராணுவமும், அரசாங்கமும் மாத்திரமன்றி சிங்கள மக்களும் இப்போது எதிர் கொள்ளத் தொடங்கியுள்ளனர். போர் எப்போதும் அழிவுகளைக் கொண்டது. சாவுகள்,இழப்புகள் இல்லாமல் எந்தப் போரும் இல்லை. போரில் ஈடுபட்டவர்கள், நீண்டகாலமாக போருக்குத் தயார்படுத்தப் பட்ட நிலையில், திடீரென ஒரு நாள் போர் முடிவுக்கு வரும் போது, அந்த அமைதிச் சூழல் அவர்களுக்கு வெறுமையானதாக தோன்றும். போர்க்காலத்தில் பழகிய நண்பர் களின் இழப்புகளின் துயர், போரில் தாங்கள் யாரையாவது கொலை செய்திருந்தால் மன தில் ஏற்படும் குற்ற உணர்ச்சி, கோபம், என்று பல வகையான மன அழுத்தங்களு க்கு அவர்கள் உள்ளாகின்ற நிலை காணப் படும்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போர்களில் பங்கெடுத்த 30 வீதமான அமெரிக்க படை வீரர்கள் இவ்வாறான உளவியல் பாதிப்புக் களை எதிர் கொண்டனர் என்று அமெரிக்க மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. போர் ஒன்றின் போதும், அதன் பின்னரும் இவ் வாறான உளவியல் பாதிப்புகள் நேரிடுவது வழமை. இவ்வாறான நிலையை சரிப்படுத் துவதற்கும், ஆற்றுப்படுத்துவதற்கும் இராணுவத்தின் மருத்துவப் படைப்பிரிவு தனியான அலகுகளைக் கொண்டிருக்கின் றன. ஆயினும் இலங்கை இராணுவம், போருக்குப் பிந்திய உள நெருக்கீடுகளை சரியாக அணுகவில்லை என்பதையே அண்மைக்கால சம்பவங்கள் பல எடுத்துக் காட்டுகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர். முடிவுக்கு வந்து 15 ஆண்டுகளாகி விட்டன. ஆனாலும், அந்தப் போரின் பாதிப்புகளில் இருந்து அரச படை யினராலோ, அவர்களைச் சார்ந்த சமூகத்தி னாலோ விடுபட முடியாமல் இருக்கிறது. இலங்கையில் இன்று அதிகரித்திருக்கின்ற குற்றச்செயல்களுக்கு போருக்குப் பின்னரான உளநெருக்கீடுகளே முக்கியமான காரணம்.

இந்த உண்மையை அரசாங்கம் மறைத்து வருகிறது. ஏனென்றால், அதை ஒப்புக் கொள்ளும் போது படையினரைப் பகைத் துக் கொள்ள வேண்டியிருக்கும், போர்க் கால மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை அரசாங்கம் நிராகரித்து வருகின்ற நிலை யில், அந்த உண்மையை ஒப்புக் கொண் டால், குற்றச் செயல்களுக்குப் பொறுப்பேற் கும் நிலை வரலாம்.

அதைவிட, அரசாங்கம் ஏன் போருக்குப் பின்னரான உள ஆற்றுப்படுத்தலை முன் னெடுக்கத் தவறியது என்ற கேள்விக்கும் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே, படையினர் மத்தியில் இன்று ஏற் பட்டுள்ள சீர்குலைவுகளை அரசாங்கம் முடிந்தவரை மூடி மறைக்கவே முற்படு கிறது. ஆனாலும், படையினர் மற்றும் படையில் இருந்து விலகியவர்கள். தப்பி யோடியவர்களால் நாட்டில் அதிகரித்துக் கொண்டிருக்கும் குற்றச் செயல்கள், நிலை மையின் விபரீதத்தை வெளிப்படுத்துகிறது.

வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் பேசிய பாராளுமன்ற உறுப் பினர் டலஸ் அழகப்பெரும, 2021, 2022 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் 27 ஆயிரம் படையினர் படைகளை விட்டுத் தப்பி யோடியிருக்கின்றனர் என்று கூறியிருந்தார். போர் நடந்த போது கூட இவ்வாறான நிலைமை இருக்கவில்லை என்றும், இது குறித்து ஆராயப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, அவர் வலியுறுத்தியிருந்தார். இராணுவத்தின் தலைமை அதிகாரி பதவி, 40 நாட்களுக்கு மேலாக நிரப்பப்படாமல் இருக்கிறது என் றும், அதற்கான காரணம் என்ன என்றும் அவர் கடந்த மாத பிற்பகு தியில் பாராளு மன்றத்தில் வினவியிருந்தார். அதற்குப் பின்னர் இன்னொரு தகவல் வெளியாகியிரு க்கிறது. இந்த ஆண்டின் முதல் 10 மாதங் களில், 140 அதிகாரிகள் உள்ளிட்ட 15 ஆயிரத்து 360 படையினர் தப்பிச் சென்றிரு க்கின்றனர் என்பதே அந்த தகவல். இரா ணுவத்தில் 99 அதிகாரிகளும், 12 ஆயிரத்து 463 சிப்பாய்களும், கடற்படையில், 26 அதி காரிகளும், 1,770 சிப்பாய்களும், விமா னப் படையில் 15 அதிகாரிகளும் 907 சிப்பாய் களும் இந்தப் பத்து மாத காலப்பகுதியில் முப்படைகளிலும் இருந்து தப்பிச் சென்றி



ருக்கிறார்கள். இந்த இரண்டு தரவுகளும் சரியானதாக இருந்தால், 2021,ற்குப் பின்னர், இதுவரையில் 42 ஆயிரத்துக்கும் அதிக மான படையினர் தப்பியோடியிருக்க வேண் டும்.

2030இல் மொத்த படைபலத்தை 1 இலட்ச த்து 50 ஆயிரமாக குறைக்கும் திட்டத்தில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக பாது காப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் அண்மையிலும் கூட கூறியிருக்கிறார்.

அதாவது இராணுவத்தின் எண்ணிக்கை 1 இலட்சமாகவும், கடற்படையின் எண்ணி க்கை 30 ஆயிரமாகவும், விமானப்படையின் எண்ணிக்கை 20 ஆயிரமாகவும் பேணப் படும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு. தற்போது முப்படைகளினதும் மொத்த படைபலம் என்ன என்ற தகவலை அவர் வெளியிடாத போதும், 2 இலட்சத்து 50 ஆயிரத்தை விட அதிகம் என்பதில் சந்தே கம் இல்லை.

பொதுவாக ஒரு இராணுவத்தில் படைக் குறைப்பு செய்யப்படும் போது பல்வேறு பிரச்சினைகள், ஏற்படும். இராணுவத்துக் குள்ளே இருப்பவர்கள் குழப்பமடைவார்கள். படைக் குறைப்புத் திட்டத்தை இந்த அரசாங்கம் பல மாதங்களுக்கு முன்னர் அறிவித்த போது, அதற்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்டவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

படைக்குறைப்பு சாத்தியம் இல்லை என் றும் வேண்டாத விபரீதங்கள் ஏற்படும் என்றும் அவர்கள் எச்சரித்தனர். இவ்வாறான நிலையில், கடந்த மூன்று ஆண்டுகளாக இராணுவத்தை விட்டு தப்பியோடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்ற தகவல். அரசாங்கத்துக்கு சாதக மானது தானே என்று சிலர் சிந்திக்க கூடும். முன்கூட்டியே படையில் இருந்து விலகு வோருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். ஓய்வூதியம் வழங்க வேண்டும். ஆனால், படையை விட்டுத் தப்பியோடியவர்களுக்கு அந்த கொடுப்பனவு எதுவும் தேவை யில்லையே என்று அவர்கள் சிந்திக்கின்றனர்.

அந்தக் கோணத்தில் அது அரசாங்கத்து க்குச் சாதகமானது தான். எல்லா இராணுவ ங்களிலும் தப்பியோடுதல் என்பது முக்கிய மான பிரச்சினை தான். அவ்வாறு தப்பி யோடியவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள ஒரு நாட்டின் இராணுவத்துக்கு சர்வதேச மதிப்பும், அங்கீகாரமும் அவ்வள வாக கிடைக்காது. போர் ஒன்றுக்கு முகம் கொடுத்திருக்கின்ற இராணுவத்தில் தப்பி யோடும் நிகழ்வுகள் அதிகமாக இருக்கும். இலங்கை இராணுவத்திலும் அவ்வாறான நிலை முன்னர் காணப்பட்டது.

ஆனால், இப்போது போர் இல்லை, பாது காப்பு அச்சுறுத்தல் இல்லை என்ற நிலை யிலும் படையில் இருந்து அதிகளவானோர் தப்பியோடுகின்றனர் என்றால் அது நிச்சய மாக ஆராயப்பட வேண்டிய விடயம். ஒன்றில் அவர்கள் அமைதிச் சூழலில் பணி யாற்ற முடியாதவர்களாக இருக்க வேண் டும். அதாவது எந்த நேரத்திலும் போர் மன நிலையும், வெறித்தனமும் கொண்டவர் களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு இ,ராணுவத்தில் அமைதியாக இருப்பது பிடிக்காது. எதையாவது செய்ய வேண்டும் என்ற அழுத்தம் உளவியல் ரீதியாக ,ருந்து கொண்டிருக்கும். இராணுவத்துக்குள் அதனை செய்ய முடியாத போது, அவர்கள் வெளியே சென்று தங்களின் வீர, தீரத்தை வெளிப்படுத்த முனைவார்கள். அல்லது, இராணுவக் கட்டமைப்பில் ஒழுங்கு சீர் குலைந்திருக்க வேண்டும். சரியான உணவு. மற்றும் பராமரிப்பு வசதிகள் கிடை க்காமல் இருக்க வேண்டும். அவ்வாறான அதிருப்தியும் படையை விட்டு தப்பி யோடும் நிலையை ஊக்குவிக்கும். படை அதிகாரிகள் அதிகளவில் சுக போகங்களை அனுபவிப்பதாகவும், சாதாரண படையினரு க்கு வசதிகள் கிடைப்பதில்லை என்றும், பாராளுமன்ற பாதுகாப்புத் துறைசார் மேற் பார்வைக் குழுவில் பாராளுமன்ற உறுப்பி னர் சந்திம வீரக்கொடி குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தார்.

அப்போது. பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ணவும், இராணுவத் தளபதி விக்கும் லியனகேயும், தன்னை அச்சுறுத் தும் வகையில் நடந்து கொண்டதாக சந்திம வீரக்கொடி சபாநாயகரிடம் முறை யிட்டிருந்தார். இந்த சிறப்புரிமை மீறல் தொடர்பாக விசாரணைக் குழுவொன்றும் சபாநாயகரி னால் நியமிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, பாதுகாப்பு சேவைகள் கட்டளை கல்லூரி யில் கடந்த ஆண்டு ஒரு நிகழ்வுக்காக சென்றிருந்த பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி மற்றும் முப்படைகளின் தளபதிகள் என 5 பேர், 5 நாட்கள் அங்கு தங்கியிருந்த போது அவர் களுக்கான உணவு மற்றும் வசதிகளுக்காக 11 இலட்சம் ரூபா செல விடப்பட்டிருப்பதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பாதுகாப்பு அமைச்சு அதனை நிராகரித்திருக்கிறது. பாதுகாப்பு அமைச்சு க்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டாலும், அந்த நிதி சாதாரண படையினருக்கான அடிப்படை வசதிகளுக்கு செலவிடப்படாது போனாலும், தப்பியோடும் நிலை அதிகரிக் கும். அதேவேளை, தப்பியோடிய படையினர் மற்றும், படையினர் இருந்து விலகிய படையினர் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்கள் அதிகரித்திருக்கின்றன.

சி.ஐ.டியின் தடுப்பில் உள்ள பாதாள உலக குழுத்தலைவர் ஒருவரை மீட்க தற் கொலைப் பாணியிலான தாக்குதலை நடத் துவதற்கு திட்டமிட்ட இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவில் இருந்து தப்பியோடிய ஒருவரை ஒருவரை அண் மையில் பொலிஸார் கைது செய்தனர். தப்பி யோடிய படையினர், பாதாள உலக குழுக் களுடன் இணைந்து செயற்படுவது அதிக ரித்துள்ளது. இவ்வாறான பலர் அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக் கின்றனர். துப்பாக்கிகளை துல்லியமாக கையாளக் கூடிய அனுபவமும், துணிச்ச லும் கொண்ட இவர்களை பாதாள உலக குழுக்கள் தாராளமாக பயன்படுத்திக் கொள் கின்றன. கொலைகள், கொள்ளைகளிலும் இவர்கள் அதிகளவில் ஈடுபடுகின்றனர்.

இதனால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருகிறது. இதனால் தான் இந்தப் பிரச் சினைகளை அரசாங்கம் தீவிரமாக எடுத் துக் கொள்கிறது. போருக்குப் பின்னர் படையினரை சரியாக கையாளத் தவறியதன் விளைவு தான் இது. இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள், சிங்கள இளைஞர் களை உசுப்பேற்றி உசுப்பேற்றி போருக்குத் திரட்டி அனுப்பிய அரசியல்வாதிகள் தான்.



# யாழ்ப்பாணத்தில் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்திய "விளையாடு மங்காத்தா" களியாட்ட நிகழ்வு!

யாழ் நகரில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் இரகசியமாக இடம்பெற்ற களியாட்ட நிகழ்வு மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த களியாட்ட நிகழ்வு 10 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்



கிழமை நடத்தப்பட்டுள்ளது. எனினும், யாழ்ப்பாண மாநகர சபை இந்த களியாட்ட நிகழ்வுக்கு அனுமதி வழங்கவில்லை என்று அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலனை தொடர்பு கொண்டபோது, இந்த களியாட்ட நிகழ்வுக்கு அனுமதி கோரப்பட்டதாகவும், எனினும் தாங்கள் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்பதுடன் அனுமதியை மீறி இந்த களியாட்ட நிகழ்வு நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் அனுமதியை மீறி நடத்தப்பட்ட இந்த களியாட்ட நிகழ்வு தொடர்பில் குறித்த நட்சத்திர விடுதி நிர்வாகத்தினரிடம் மறுநாள் விளக்கம் கோரியுள்ளதாகவும் யாழ். மாநகர ஆணையாளர் குறிப்பிட்டார். தனியார் நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் 'விளையாடு மங்காத்தா' எனும் பெயரில் நடைபெற்ற இந்த இரவு இசை விருந்துக்கு, ஒருவருக்கு உணவுடனான நுழைவுச் சீட்டு 3 ஆயிரம் ரூபாய்க்கும், சாதாரண நுழைவுச் சீட்டு 1500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான, கேளிக்கை நிகழ்வுகளுக்கு நுழைவுச்சீட்டு விற்பனை செய்வதாயின் மாநகர சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதுடன், நுழைவுச் சீட்டின் பெறுமதியில் குறிப்பிட்ட வீதம் மாநகர சபைக்கு வரியாக செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், எவ்வித அனுமதிகளும் இன்றி இந்த நிகழ்வு நடத்தப்பட்டுள்ளதுடன் வரி ஏய்ப்பு செய்யும் வகையிலும் இந்த நிகழ்வு அமைந்துள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இடம் பெற்ற இந்த கேளிக்கை நிகழ்வின்போது, மது பான பாவனை காணப்பட்டதுடன், கைக்கலப்பும் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த நட்சத்திர விடுதியில் கடந்த மாதம் 4ஆம் திகதி நடத்தப்பட்ட இதே போன்றதொரு கேளிக்கை இசை நிகழ்ச்சி பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. அந்த நிகழ்வின் போது போதைப் பொருள் பாவனை அதிகரித்திருந்ததுடன், பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் தனியாளாகவும், ஜோடிகளாகவும் கலந்து கொண்டிருந்ததாகவும், அவர்களுக்கு தனியான அறைகள் வழங்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறான நிலையில் வடக்கில் தற்போது அதிகரித்து வரும் இவ்வாறான கேளிக்கை நிகழ்வுகள் எதிர்கால இளைய சமூகத்தினருக்கு தவறான முன்னுதாரணமாக இருப்பதுடன், தவறான பாதையில் இட்டுச் செல்ல வழிவகுப்பது போல உள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் யாழ். மாநகர சபை அனுமதி வழங்க மறுத்தபோதும் அதனையும் மீறி இவ்வாறான கேளிக்கை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுள்ளமை, மாநகர சபையினரின் ஆணையை மறுப்பதுடன், அவமதிக்கும் செயற்பாடாக பார்க்கப்படுகின்றது.

இதேவேளை எதிர்கால இளைய சமூகத்தினரை தவறான பாதையில் திசை திருப்பும் வகையில் இந்த கேளிக்கை நிகழ்வுகள் நடத்தப்படுவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா அனுசரணையில் நூல் வெளியீடு

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் எழுதிய

கனடா வரலாற்றில் தமிழர் படகுகள்

காலம்: 16-12-2023 (சனிக்கிழமை) நேரம்: மாலை 3.30 மணி

இடம்: ஸ்காபுரோ நகரசபை- சபாமண்டபம்

Scarborough Civic Centre – Chamber hall


150 Borough Dr. Scarborough- ON- M1P 4N7

இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:

சாந்தி.ச(647)200-2177மு.கிருபாகரன்

(416) 430-0422 ப.கஜஜெயன் (416) 732-5898


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300

Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832

Email: info@creditrecoverycanada.ca



# இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் வடக்கு விஜயமும் நிவாரண அரசியலும்

இலங்கை-இந்திய உறவு சார்ந்து ஈழத்தமிழரது அரசியல் தீர்மானிக்கப்படுவது யதார்த்தமானது. இந்தியாவை நிராகரித்து விட்டு ஈழத்தமிழர் அரசியல் இருப்பு சாத்தியமாகாது என்பதை கடந்த காலம் முழுவதும் ஈழத்தமிழரை இந்தியா உணர வைத்துள்ளது. ஆயுதப் போராட்டத்தின் தொடக்கத்தையும் முடிவையும் வரைந்த இந்தியா, அதன் பின்பான ஈழத் தமிழரது அரசியலையும் கட்டமைக்க திட்டமிடுகிறது. ஆனால் அவை அனைத்தையும் தனது நலனுக்குட்பட்ட விதத்திலேயே செயல்பட முனைவதையே ஈழத்தமிழர் இந்தியா விரிசலுக்கு காரணம் என விளங்கிக் கொள்ள முடியும்.

அதனை சரிவரப் பயன்படுத்தும் தென்னிலங்கையின் தந்திரோபாயம் ஈழத்தமிழரது அரசியல் தலைமைகளின் பலவீனமானது சேர்ந்தும் விரிசலை வலுப்படுத்தி வருகிறது. இந்த விரிசல் அனைத்தும் ஈழத் தமிழரது அரசியலை அழிவுக்குத் தள்ளியதுடன், அனைத்து துயரங்களுக்கும் வழி சமைத்துள்ளது.

இக்கட்டுரையும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வடக்குக்கு மேற்கொண்ட விஜயத்தின் பிரதிபலிப்புகளை தேடுவதாக அமையயுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே வடக்குக்கு வருகை தந்து (1-3.12.2023) பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் அதற்கான உரையாடலையும் முன் வைத்ததோடு, நிவாரண உதவிகளையும் நெருக்கடிக்கு உட்பட்ட மக்களுக்கு வழங்கி வைத்தார்.

குறிப்பாக நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆலயம் மற்றும் விகாரைகளுக்கு விஜயம் செய்த தூதுவர், அவர்களது கோரிக்கைகளை தீர்ப்பதாகவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார். தலைமன்னார்-தனுஷ்கோடி தரைவழிப் பாதை அமைப்பதற்கான முன்னகர்வுகள் தொடர்ந்து நிகழ்வதாகவும் அதற்கான நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கை இணைத்து இலங்கை - இந்தியா எரிபொருள் குழாய் செயற்றிட்டம் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக தூதுவர் தெரிவித்துள்ளார். அதே நேரம் தலைமன்னார்-இராமேஸ்வரத்திற்குமான கப்பல் சேவை குறித்து அடுத்த கட்ட நகர்வுகள் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார். இதேவேளை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முயற்சியில் 13. ஆவது. அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியா வலியுறுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த தூதுவர், 100 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக முதல் கட்டமாக 3 மில்லியன் ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தரிடமும் மாணவ பிரதிநிதிகளிடமும் கையளித்தார். அத்துடன் இந்து கற்கைப் பீடத்தின் இரு விரிவுரையாளர்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கலாசாரப் பேரவையின் உயர் கல்வி புலமைப்பரிசில் பெற்று உயர் கல்வியை தொடர்வதற்குரிய கடிதத்தையும் கையளித்தார்.

அது மட்டுமன்றி வடக்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நிவாரணமும் தூதுவரால் வழங்கப்பட்டது. இவ்வாறு ஒரு நிவாரண அரசியல் ,லங்கைக்கான இந்தியத் தூதுவரால் வடக்கு விஜயத்தின் மூலம் நிகழ்ந்துள்ளது. இத்தகைய நிவாரண அரசியலை தூதுவர் மேற்கொள்வதற்கான அடிப்படைகளைத் தேடுவது அவசியமானது. ஏனெனில் தூதரகங்களின் இத்தகைய செயல்கள் இயல்பான நகர்வாக அமைந்தாலும் நடைமுறையில் இந்தியத் தூதுவரது தற்போதைய நடவடிக்கை விசேடமானதாக தெரிகிறது.

ஏற்கனவே தூதுவர் வடக்குக்கு பல தடவை விஜயங்களை மேற்கொண்டுள்ளார். அப்போது இல்லாத அக்கறையும் நகர்வும் தற்போது நிகழ்ந்துள்ளது. சில ஊடகங்கள் குறிப்பிடுவது போல் அவரது காலப்பகுதி நிறைவடைவதைப் பொறுத்து இவ்வாறு செயல்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டாலும் அதற்குள்ளும் ஒரு விசேடத்துவம் காணப்படுகிறது. கடந்தகாலங்களில் பல தூதுவர்கள் பணி புரிந்த போதும் மாற்றமுற்று செல்லும் மரபில் நிவாரண அரசியல் எதனையும் அதிகம் முதன்மைப்படுத்தியதாகத் தெரியவில்லை. அவ்வாறு நிகழ்ந்திருந்தாலும் தற்போது கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.



என்றே தெரிகிறது. ஒன்று, இலங்கைக்கான சீனத் தூதுவரான கசென்ஹொங் நவம்பர் மாதம் வடக்குக்கு வருகை தந்திருந்தார். அப்போது அவரது வருகையின் பிரகாரம் மீனவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசியலை மேற்கொண்டிருந்தார். அவரது வருகையை அடுத்து இந்திய நிதியமைச்சரின் வருகை அமைத்திருந்தது. அதனை அடுத்து சீனாவின் விசேட தூதுவர் குழுமம் இலங்கைக்கு வருகை தந்திருந்தது. ஆனால் அத்தரப்பு வடக்குக்கு விஜயம் செய்யவில்லை. ஆனாலும் இலங்கைத் தீவுக்கான வருகையில் இருநாடுகளும் முதன்மை வகிப்பதுடன், போட்டித்தன்மையுடன் நகர்வதாகவே தெரிகிறது.

இதனால் ஏற்பட்ட பாதிப்பின் பிரகாரம் ,ந்தியத் தூதுவரது வடக்கு விஜயம் அமைந்திருக்க வாய்ப்பு அதிகமுள்ளதாகவே தெரிகிறது. சீனாவின் வடக்கு மீதான கவனமும் கரிசனையும் அதீதமாகவே உள்ளது. கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது சீனாவின் பிரவேசம் வடக்கு மாகாணத்தை நோக்கி அதிகரித்துள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதார ஒத்துழைப்புகள், நிவாரண நடவடிக்கைகள் என பல விடயங்களில் சீனாவின் செயல்பாடு வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ளது. அதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டை அடிப்படையாகக் கொண்டு சீனா செயல்படுகிறது. அதற்கான அடிப்படை இந்தியாவின் நிலப்பரப்பிற்கு அண்மைய நிலப்பகுதியாக யாழ்ப்பாணக் குடாநாடு அமைந்திருப்பதே காரணமாகும்.

இதன் நியதி பாதுகாப்புச் சார்ந்தது. அத்தகைய இந்தியப் பாதுகாப்பின் எல்லைக்குள் இலங்கைத் தீவு மட்டுமல்ல அதன் பகுதியான யாழ்ப்பாணக் குடாநாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதனால் சீனாவின் செல்வாக்கை வடக்குப் பகுதியில் வளர விடாது தடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தியத் தூதுவரது நகர்வு அமைந்துள்ளது.

முழுமையாக இந்தியாவின் நகர்வு அதுவாகவே உள்ளது. ஆனால் வெளிப்படையாக சீனாவை இந்தியா பார்த்துக் கொள்ளும், அது பற்றி ஈழத்தமிழர் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்ற விதத்தில் இந்தியத் தூதுவரே பல சந்தர்ப்பங்களில் உரையாடியுள்ளார். தற்போது ஈழத்தமிழர் குறிப்பிட்ட அதே எல்லைக்குள் இந்தியத் தூதுவர் செயல்படுகின்றார். ஏறக்குறைய 1990களின் நடுப்பகுதியிலிருந்து ஈழத்தமிழர்கள் சீனா பற்றிய விழிப்புணர்வையும் எச்சரிக்கையையும் கொண்டவர்கள் என்பது நினைவில் கொள்ள வேண்டும். அப்போதெல்லாம் மௌனம் காத்துக் கொண்ட இந்தியத் தரப்பு தற்போது விழிப்பதால் எத்தகைய விளைவையும் ஏற்படுத்தி விடலாம் எனக் கருதிவிட முடியாது.

இலங்கைத்தீவில் சீனா நிலை கொண்டு விட்டதாகவே தெரிகிறது.இதனை உடைப்பதென்பது இலங்கைத்தீவின் இறைமையை பாராதீனப்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும். அதற்கான வாய்ப்பு சாத்தியமாகுமா என்பது பிரதான கேள்வியாகும்.

அதற்காக இந்தியா இந்திராகாந்தி யுகத்தை நோக்கி நகர வேண்டும். அதற்கு இந்தியாவின் ஆளும் வர்க்கம் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. வேண்டுமாயின் இப்படியான எண்ணத்தை திட்டமாக கொள்ளலாமே அன்றி அதனை சாத்தியப்படுத்தலாமா என்பது கடினமானதாகத் தெரிகிறது.

இரண்டு, இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் தரைவழிப் பாதை தொடர்பில் வடக்கில் இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ள கருத்து மிக முக்கியமானது. அதிலும் வடக்கை மையப்படுத்தி அத்தகைய தரைவழிப் பாதை பற்றிய உரையாடல் திட்டமிடப்படுகிறது. அது ஈழத் தமிழரது அரசியல் இருப்பிற்கான பலமாக அமைந்தாலும் அதனால் தென்னிலங்கை ஏற்படுத்தப் போகும் அரசியல் நகர்வு எதுவாக அமையும் என்பது கடந்த காலத்தில் தெரியாததொன்றல்ல.

ஏனைய விடயங்களில் இந்தியாவின் திட்டமிடலுக்கு தென்னிலங்கை ஒத்துழைப்பு வழங்கினாலும் தரை வழித் தொடர்புக்கு ஒத்துழைக்குமென கருதுவது கடினம். அத்தகைய திட்டமிடல் தென்னிலங்கையின் இனவாத உணர்வுக்கே வழியமைக்கும். ஈழத்தமிழர் மீதான தென்னிலங்கையின் கோபத்திற்கு இந்தியாவே காரணம் என்ற கருதுகோள் பலமாக நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இலங்கைத் தீவில் நிகழ்ந்த அனைத்து படுகொலைகளுக்கும் கலவரங்களுக்கும் அடிப்படையில் இந்தியா மீதான அச்ச உணர்வே காரணம் என்ற வாதம் நியாயமானதாகவே தெரிகிறது. இந்தியாவின் கடந்தகால அணுகுமுறைகள் அனைத்துமே தென்னிலங்கையை அச்சுறுத்துவதாகவே அமைந்துள்ளது. மிகப் பிந்திய காலத்தில் அதாவது 1987இல் இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளை வடமராச்சியில் போடும் போது இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும் பதுங்கு குழிகளில் இருந்ததாக தகவல்கள் உண்டு. இராணுவ பலத்தால் இந்தியாவை எதிர்கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்ட தென்னிலங்கை, புத்திபூர்வமான அணுகுமுறைகளால் இந்தியாவை கையாள ஆரம்பித்தது. அதில் வெற்றியும் கண்டு கொண்டது. அதனை காலம் காலமாக ஆட்சியாளர்களும் மகா சங்கத்தினரும் பின்பற்றி வருகின்றனர். ஈழத்தமிழரது தோல்விக்கும் இந்தியாவின் நெருக்கடிக்கும் தென்னிலங்கையின் தந்திரோபாயமே பிரதான காரணமாகும்.

**கட்டுரையாளர்:**
**இலங்கையில் இருந்து**
**பேராசிரியர்**
**– K.T.கணேசலிங்கம் –**



இந்திய ஆட்சியாளர்கள் இலங்கைத்தீவை சிறிய நாடெனக் கருதுகிறார்களே அன்றி மரபார்ந்த தந்திரோபாயத்தையும் வலுமிக்க இராஜதந்திர வரலாற்றைக் கொண்ட நாடு எனக் கருத தவறுகின்றனர். அது மட்டுமன்றி நிவாரண அரசியலில் வடக்கு மீனவர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களது இயந்திரப் படகுகளாலும் சீனாவின் கடலட்டை வளர்ப்பினாலும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் நிவாரணம் வழங்குவதனால் அவர்களது வாழ்வாதாரமோ கடல் மீதான இறைமையோ பாதுகாக்கப்படப் போவதில்லை. இவை அனைத்தும் ஈழத்தமிழரை ஆழ்கடல் மீன்பிடியிலிருந்து அகற்றும் நகர்வுகளாகவே தெரிகிறது. தென்னிலங்கை மட்டுமல்ல இந்தியா, சீனாவும் அத்தகைய நகர்வுக்கு உதவுவதாகவே தெரிகிறது. ஈழத்தமிழர் கோருவதெல்லாம் தமது கடலையும் நிலத்தையும் பிற சக்திகள் தலையிடாது அல்லது ஆக்கிரமிக்காது பாதுகாத்துக் கொள்வதற்கான அரசியல் அதிகாரமேயாகும். அத்தகைய அதிகாரம் கிடைக்குமாயின் ஏனைய அனைத்தையும் ஈழத்தமிழர் உருவாக்கிக் கொள்ளும் திறனுடையவர்களாகவே உள்ளனர்.

எனவே இலங்கைக்கான ,ந்தியத் தூதுவரது வடக்கு நோக்கிய நகர்வு சீனாவின் நிவாரண அரசியலை முறியடிப்பதாக



அமைந்தாலும் வடக்கை தனித்துவமானதாக ஆக்குவதில் கவனம் கொண்டிருப்பது போல் தெரிகிறது.

அதேநேரம் தென்னிலங்கையின் ஆட்சியில் சில மாற்றங்களை நோக்கி இத்தகைய நடவடிக்கைகள் ஏற்படுத்தும் என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. குறிப்பாக தற்போதுள்ள ஜனாதிபதியின் ஆட்சி இந்தியாவுக்கு அதிகம் சௌகரியமானதாக அமையாதுள்ளது என்பது இந்தியாவின் நகர்வுகளைக் கொண்டு உணர முடிகிறது. அதனால் இதில் ஒரு மாற்றத்தை வடக்கு தொடர்பில் இந்தியா கொள்கின்ற கொள்கை ஏற்படுத்தலாம் என்ற விவாதம் நியாயமானதாகவே தெரிகிறது.

அதற்கான வாய்ப்பு அதிகமுள்ளதாகவே தெரிகிறது. அப்படியாயின் இந்தியா மீண்டும் ஒரு நெருக்கடிக்குள் அகப்படும் நிலை ஏற்படும் என்பதைவிட ஈழத்தமிழர் தோல்வியில் இன்னோர் பதிவு சாத்தியமாக வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும். உத்தியோகத்தில் செயல்திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப் பெறுவீர்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பெண்கள் எந்த விஷயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள்.

ரிஷபராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும். குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். வீண் வாக்குவாதங்கள் அகலும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை நீங்கும்.

மிதுனராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும் போதும் கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும்.

கடகராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எழுத்து தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். தொழில், வியாபாரம் தொடர்பாக துணிச்சலாக எடுக்கும் முடிவுகள் வெற்றியை தரும்.

சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதலை தரும். உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனமாக தங்களது பணிகளை கவனிப்பது நல்லது.

கன்னிராசி அன்பர்களே! லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். எதை விரும்பினாலும் அது கிடைக்க வழி தெரியும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். பணியாளர்கள் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். தொழில் விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். உத்யோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்க பெறுவர்.

துலாம்ராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். வேலை தொடர்பான வீண் அலைச்சல் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து வந்த பூசல்கள் அகலும். பெண்கள் எதை பற்றியும் அதிகம் யோசித்து மனதை குழப்பி கொள்ளாமல் இருப்பது நன்மை.

விருச்சிகராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்னை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். ஆனாலும் அதன் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.



தனுசுராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் அடையும். அதே வேளையில் சுபச்செலவுகள் அதிகமாகும். எந்த விஷயத்திலும் மிகவும் நிதானமாக இருப்பது நல்லது. அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பதோ அல்லது அதைப் பற்றி விவாதிப்பதையோ தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம் கவனம் தேவை. வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும்.

கும்பராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்னை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும்.

மீனராசி அன்பர்களே! செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதூர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். பெண்கள் சாதூர்யமாக பேசி எல்லா காரியத்தையும் வெற்றிகரமாக செய்து முடிப்பர். இவ்வாரம் சிறப்பானதாகும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# பிரித்தானியாவின் பதில் என்ன?

(16ம்பக்கத் தொடர்ச்சி) தாங்கள் அறிந்திருப்பதாகவும். லியோ டொசெர்ட்டி கூறியிருந்தார். மனித உரிமைகள் கரிசனைக்குரிய 32 நாடுகளில் இலங்கையையும் ஒன்றாக வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருந்த பிரித்தானிய இராஜாங்க செயலர், இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கத்தின் பங்களிப்பு அல்லது உத்தி என்ன என்பது பற்றிய இந்த விடயத்தையும் குறிப்பிடவில்லை.

போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக தடைகளை விதிப்பது உள்ளிட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி இடம்பெற்ற இந்த விவாதத்தில் அதனை சார்ந்த எந்த வாக்குறுதியையும் பிரித்தானிய அரசாங்கம் வழங்க முன்வர வைக்கவில்லை. ஆனாலும் இந்த விவாதம் பிரித்தானிய அரசுக்கான அழுத்தங்களை அதிகரிக்க செய்திருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கு அப்பால் இலங்கையில் தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளை நிறுத்துவது, பொறுப்பு கூறல் சார்ந்து செயற்படுவது போன்ற விடயங்களில், பிரித்தானியாவுக்கு கூடுதல் பொறுப்பு உள்ளது என்பதை பிரித்தானிய பாராளுமன்ற விவாதம் வெளிப்படுத்தி இருக்கிறது. இதற்கு அப்பால் பிரித்தானிய அரசாங்கமே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- எடுக்க முடியும்.

அது எவ்வாறானது என்பதையிட்டு எவ்வித கருத்தும் பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து வெளிப்படுத்தப்படாதது ஏமாற்றத்துக்குரிய ஒரு விடயம் தான்.

போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக தடைகளை விதிக்க பிரித்தானியா தயாராகிறது என, தகவல்கள் வெளியாகி பல மாதங்களாகியும் அது சார்ந்த எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடந்த இந்த விவாதமும் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரங்களும் அதற்கான உந்துதல்களை பிரித்தானிய அரசுக்கு கொடுக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# அரசியல் சீர்குலைவை சரி செய்வதே முதன்மை

(7ம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேச அரங்கில் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி செயல்பட்டு வருகின்ற போது இதேவேளை, தாயக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சிகளின் தலைவர்கள இந்தியாவின் உதவியை கோரி வரும் சூழலில் தன்னிச்சையாக சிங்கள மக்களோடு உரையாடப் போகின்றோம் என்று சிலர் தென்னிலங்கையில் சந்திப்புகளை மேற் கொள்வதானது அடிப்படையிலேயே தமிழர் அரசியலை பலப்படுத்தும் செயல்பாடுகளாக அமையாது. இவை அனைத்தும் தமிழ் அரசியலின் சீர்குலைவையே அடையாளப்படுத்தும். மற்றவர்களோடு உரையாட செல்வதற்கு முன்னர் தமிழ்த் தேசிய தரப்புகள் அனைவரும் ஒன்றுபட்டு தமிழர் அரசியலிலுள்ள சீர்குலைவை சரி செய்ய வேண்டும என்பதே எமது நிலைப்பாடாகும்.

# கொழும்பில் ரணிலுடன் உலகத்தமிழர்....

(3ம் பக்கத் தொடர்ச்சி) கிருஷ்ணகுமார், சசி புண்ணியமூர்த்தி ஆகிய ஊடகவியலாளர்கள் உட்பட 35 செயல்பாட்டாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து இருக்கின்றார்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி திருமதி அமலதாஸ் நாயகி பொலிஸ் நிலையம் அழைத்து விசாரித்துள்ளார்கள் மாதவனை, மயிலத்தமடு மேய்ச்சல் நில ஆக்கிரமிப்புகளுக்கெதிராக போராடிய பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டு உள்ளனர்

சுண்டிக்குளம் பகுதியில் காணிகளை துப்பரவு செய்த 130 பேருக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் அது தமக்குரிய காணி என நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருகின்றார்கள் இவ்வாறு உள்ளூர் களத்திலுள்ள பத்திரிகையாளர்கள், மாணவர்கள் செயல்பாட்டாளர்கள் என பல தரப்பு மனிதர்கள் மீது பயங்கரவாத சட்டம் உட்பட பல்வேறு சட்ட பிரிவின் கீழ் வன்முறைகளை ஏவி கொண்டு சம நேரத்தில் கொழும்பில் நின்று நல்லிணக்கம் பேசுகின்றார்கள். நல்லிணக்க பிரகடனங் களை வெளியிடுவதாக கதை சொல்லுகின்றார்கள். நன்றி:- அனந்தி சசிதரன்

# யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட படையினருக்கு எதிராக தடை!

(3ம் பக்கத் தொடர்ச்சி) என சபைக்கு உறுதி செய்யுங்கள் என்றார் டிரெவெல்யன் பின்வருமாறு பதிலளித்தார். நம்பகதன்மை மிக்க உள்நாட்டு பொறுப்புக்கூறல் செயன்முறை குறித்த இலங்கையின் மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களின் கரிசனையை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் .இந்த கரிசனைகளிற்கு தீர்வை காணுமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்துகின்றோம் நான் அங்கு விஜயம் மேற்கொண்ட வேளை இது குறித்த கரிசனையை எழுப்பினேன் மனித உரிமைகள் குறித்தும் நீதி விடயங்கள் குறித்தும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்களிடம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன் என தெரிவித்துள்ளார்.



# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# இலங்கை சென்றுள்ள தமிழர் குழு பெரும்பான்மை புலம்பெயர் தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை 6 புலம்பெயர் அமைப்புக்கள் கூட்டாக அறிக்கை

இலங்கை சென்றுள்ள உலக தமிழர் பேரவையை சேர்ந்த பிரதிநிதிகள் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரை பிரதி நிதித்துவம் செய்யவில்லை. அத்துடன், அவர்களின் கருத்துகள் பெரும்பான்மையான புலம் பெயர் தமிழ் மக்களின் கருத்துகளையும் பிரதிபலிக்கவில்லை என்று ஆறு முக்கிய புலம்பெயர் அமைப்புகள் கூட்டு அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளன. ஆறு அமை ப்புகளும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில்,

இலங்கையின் அர்த்தமுள்ள முன்னேற்றத்து க்கு புலம்பெயர் தமிழர்களின் பெரும் பான்மை பிரதிநிதித்துவத்தின் ஈடுபாடு அவசியம். புலம்பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் சிலரும் சிங்கள, பௌத்த மத குருமார்கள் மற்றும் தென்னிலங்கை சிவில் சமூகத்தின் ஒரு பிரிவினரும் அண்மையில் மேற்கொண்ட முயற்சி குறித்துஊடகங்கள் மூலம் அறிந் தோம்.

புலம்பெயர் தமிழர்களில் தெரிந்தெடுக்கப் பட்ட வரையறுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் மட்டும் இந்தக் கலந்துரையாடல் ஆரம்ப மாகியிருப்பது துரதிர்ஷ்டம். உலகத் தமிழர் பேரவை புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் ஒரு சிலரை மட்டுமே பிரதி நிதித்துவம் செய்கிறது. பெரும்பான்மை யான புலம்பெயர் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகளை முழுமையாக உள்ளடக்கவில்லை.

கடந்த 2009 செப்ரெம்பரில் பிரான்ஸின் பாரிஸில் உருவாக்கப்பட்ட உலக தமிழர் பேரவை 10 ஐரோப்பியநாடுகள் உள்ளிட்ட 14 நாடுகளை சேர்ந்த அமைப்புகளின் பிரதி நிதித்துவத்துடன் உருவாக்கப்பட்டது. இவற்றில் பெரும்பாலானவை உலக தமிழர் பேரவையிலிருந்து தற்போது பிரிந்து விட்டன. பிரிட்டிஷ் தமிழ் மன்றம், அவுஸ் திரேலிய தமிழ் காங்கிரஸ், யு. எஸ். ரி. பி.ஏ. சி. என முன்பு அறியப்பட்ட யுனைற்றட் ஸ்ரேற்ஸ் தமிழ் அக்ஷன் குறூப் (யு. எஸ். ரி.ஏ.ஜி.) போன்றவை உலக தமிழர் பேரவை யிலிருந்து விலகி விட்டன.

இதனால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் ஆதரவை அந்த அமைப்பு கொண்டிருக்கவில்லை.

வடக்கு, கிழக்கு, தமிழ் மக்களின் கருத்து களுடன் நெருக்கமாக இணைந்திருக்கும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களில் பெரும் பான்மையினரின் ஆதரவை கொண்டுள்ள அமைப்புகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களை சேர்ந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப ங்கள், சிவில் சமூக, சமய, பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அடிப்படை கோட்பாடு களை ஏற்றுள்ளன.

இதன்படி, 1948ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த மக்களும் அவர்களின் சந்ததியினரும் தமிழர் களின் நியாயமான அபிலாசைகளை பூர்த்தி செய்யும் ஜனநாயக அமைதி வழியான நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்கு சர்வதேச கண்காணிப்புடனான வாக்கெடுப்பு அவசியம்.

வடக்கு, கிழக்கில் தற்போதுள்ள அதிகப் படியான இராணுவ பிரசன்னம் காரணமாக இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறி முறை நிறுவப்பட வேண்டும், மக்களுக்கு அரசியல் உரிமைகளை சுதந்திரமாக வழங் குவதற்காக இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை இரத்து செய்ய வேண்டும். இனப் படுகொலை, மனித குலத்துக்கு எதிரான போர் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் துக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும். இனப் படுகொலை மற்றும் போர்குற்றத்து க்கு சர்வதேச நீதிமன்றில்விசாரணை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த அபிலாசைகளை புரிந்து கொள்ளு மாறும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளு மாறும் சிங்கள, பௌத்த மதகுருமார்கள் மற்றும் தெற்கு சிவில் சமூகத்தை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இத்தகைய முற் போக்கான நடவடிக்கை அனைத்து சமூக ங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை நோக்கிய குறிப்பிடத்தக்க மாற்றத்தை நிரூபிப்பதுடன், தமிழ்த் தேசிய பிரச்சனை க்கு நியாயமான நீடித்த தீர்வை காணவும் பங்களிக்கும் மற்றும் பாதுகாப்பான வள மான இலங்கைக்கு வழி வகுக்கும் என்று ள்ளது.

